# ரமணோதயம்

ஜனவரி 2014
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20





# ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை
# நூற்றாண்டு (1914-2014)

## அக்ஷரமணமாலை பாராயணம்

அருணாசல அக்ஷரமணமாலை நூற்றாண்டையொட்டி ஸ்ரீரமணாச்ரமத்தில் 1-1-2014 முதல் 31-12-2014 வரை (ஒரு வருடத்திற்கு) தினமும் காலை 6 மணிக்கு பகவான் சந்நிதியில் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்று வருகின்றது.

ரமண அன்பர்கள் பகவான் ஸ்ரீ ரமணர் அருணாசலேஸ்வரர்மீது அருளிய அக்ஷரமணமாலை எனும் மகா மந்திரத்தை நாள்தோறும் தவறாமல் பாராயணம் செய்து ஞானமடையலாம்.

இவ்வரிய மந்திரம் நமது ஒவ்வொருவரது மூச்சுக்காற்றாக இழையோட ரமணோதயம் பகவானைப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

உதயம் 13 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2014

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை 'ரமண கேந்திரா டிரஸ்ட் a/c ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

A குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2014


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | தியானமும் சமாதியும் - பகவான் திருமொழிகள் | 20 |
| 3 | இனிவரும் திருநாட்கள் - 2014 | 23 |
| 4 | உத்தமனுடன் உரையாடல் | 24 |
| 5 | ரிபுகீதை - தியாகராஜன் | 25 |
| 6 | ஒன்றாகக் காண்பதே காட்சி - சு. பரமேஸ்வரன் | 33 |
| 7 | திருரமணக் குறள் - தாயுமானவன் | 43 |
| 8 | உண்டு ஒருபொருள் அறிவு ஒளி உளமே நீ - வி. நிரஞ்சன் | 45 |
| 9 | ரமணரின் ‘இந்த அமைதி’ செய்யப்பட்டதல்ல! - பிர. கிரிதர ஜெததீஷ் | 51 |
| 10 | ரமணரை அறிந்திடவா பாப்பா | 60 |
| 11 | படித்தால் மட்டும் போதுமா? பகவானைப் படியுங்கள்! - சேலம் சேதுகுமாரன் | 61 |
| 12 | பகவானின் ரஸவாதம் | 70 |
| 13 | நூல் விமரிசனம் | 72 |
| 14 | செய்திகள் | 73 |
| 15 | ரமணோதயம் காப்புநிதி தொடரும் நன்கொடையாளர்கள் | 79 |

# ஆசிரியர் உரை

## எழுந்திராய்! எம்பாவாய்!

இது மார்கழி மாதம்! அடியார் எல்லோரும் வைகறையில் துயில் எழுந்து நீராடி, இறைவன் திருவருளைப் பாடுகின்றனர். மாந்தர் மட்டுமா? இந்த வைகறை வேளையில் பறவைகள்கூட எழுந்து பகவான் புகழைப் பாடுகின்றனவாம். புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன்கோயிலில் என்று ஆண்டாள் பாடுகிறாரே! அதே போன்று அருணைத் திருமலையிலும் பறவைகள் வைகறைத் துயில் எழுந்து 'ரமணா! ரமணா!' என்று குரல் எழுப்புகின்றனவாம். அது அடியார் பகவானின் அருளை வேண்டிப் பாடுவதுபோல் உள்ளதாக ரமணத் திருவெம்பாவையில் முருகனார் பாடுகிறார்.

*மருவினார் தங்கண் மனக்களிம்பு மாற்றி*
*உருவிளங்கு பொன்னா வொளிர்விக்குங் கண்ணான்*
*பொருவிலா ஞானபரி பூன்றமுழு மோனி*
*இருளதுகா ணாத ரமணகுரு நாதன்*
*அருணிதிய நோக்கியடி யாரார்த்தல் போலக்*
*குருவிக ளார்ப்பக் குரல்குவிய வேனல்*
*கருவிமலி சோணை கரைந்தொழுகு தூநீர்*
*அருவிநீ ராடி யவிரேலோ ரெம்பாவாய்.*

(ரமண சந்நிதிமுறை, 1466)

தம்மைச் சரணடைந்தவர்களின் மனக் களிம்பாகிய ஆணவத்தை முற்றும் நீக்கி அவர்தம் ஸ்வபாவமான ஆன்மா இதயத்திலே பொன்போல ஜொலிக்கும்படி அருள்புரியும் திருக்கண்ணை உடைய பகவான்

சற்றேனும் தன் ஸ்வரூப நிலையில் இருந்து வழுவாத பரிபூரண ஞான மோனத்தில் நிலை பெற்றவன். நமது அஞ்ஞான இருளை நீக்குவித்த ரமண குருநாதனின் அருள்செல்வம் வேண்டி அடியார் பாடுவதுபோல குருவிகள் ஒலி எழுப்புகின்றன. வேனில்கால மேகங்கள் கொட்டிய மழைநீர் அருவியாய் ஓடும் அருணையில் நீராடி நாம் ஞான ஒளி பெறுவோம் என்கிறார் முருகனார். தேடாதுற்ற இந்தத் திருவருள் நிதியம் தொலைக்காமல் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

வாகீச கலாநிதி கூறிய உதாரணம் என் நினைவுக்கு வருகிறது.

தன் பெண்ணுக்குக் கல்யாணமான கதையைக் கூறுகிறார் ஒருவர். எனக்கு எவ்வளவு உயரிய பண்புடைய மாப்பிள்ளை கிடைத்தார் தெரியுமா? ஊரில் பலர் தம் பணத்தையும் பதவியையும் கொண்டு வலைபோட்டு தங்கள் மகளிர்க்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்களோ எனது இந்த மாப்பிள்ளையைப் பற்றிக் கேட்டிருக்கவில்லை. கேட்டிருந்தாலும் பார்த்திருக்க வில்லை. எனக்கு அவர் கிடைத்தார்.

அப்படியா! எப்படிக் கிடைத்தார்?

அதுதான் நாங்கள் செய்த பேறு. யார் கண்ணுக்கும் தென்படாத அவன், யாராலும் அடைதற்கரிய அவன், தானே வந்து இவளை மணந்துகொண்டான். உலகோர் கண்ணுக்கும் தென்படாத இவன் தானே வந்து மணந்து கொண்டான். பெரிய ஆச்சரியம் அல்லவா இது!

அப்படியா! அவர்கள் இருவரும் சந்தோஷமாக ஒன்றாக இருக்கிறார்கள் அல்லவா?

அதை ஏன் கேட்கிறீர்கள்! மணந்த கையோடு அவளை விட்டுச் சென்றவன் இன்றுவரை வந்து அழைத்துச் செல்லவில்லை! என் பெண்ணோ அவன் எப்போது வந்து அழைத்துச் செல்வான் என்று அலமந்து கிடக்கிறாள்.

அந்த மகளிர் நிலையில் இருந்து மணிவாசகர் பாடுகிறார். இறைவன் திருப்பெருந்துறையில் வந்து தானே வந்து தலையளித்து அரியவனாகவும், எளியவனாகவும் உள்ள அவன், யாராலும் அறிய இயலாத அவன், என்னை ஆட்கொண்டானே! ஞானமாகவும் வானமாகவும் பரந்திருப்பவன் அவனே! ஐந்து பூதங்களும் தோன்றி ஒடுங்குகின்ற காலமும் அவனே! என்னை ஆட்கொண்டு மீண்டும் சென்று விட்டானே! அவனை எப்போது மீண்டும் காண்பேன்! என்கிறார் மணிவாசகர்.

மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே, எனை ஆட்கொண்ட கூத்தனே,
ஞாலமே, விசும்பே, இவை வந்து போம்
காலமே! உனை என்று கொல் காண்பதே?

என்கிறது திருவாசகம்.

இதேபோன்று என்னை வந்து தானே கலந்த ரமண நாயகனே! என்னை விட்டு ஏன் நீ நீங்கினாய் என்று மருகுகிறார் முருகனார் (நீத்தல் விண்ணப்பம் - ரமண சந்நிதிமுறை - 607)

கள்ளம் புகுநெஞ்சர் காணாக் கதிரொளி கைதவனேன்
உள்ளம் புகுதந் தொளிர்தர வாண்டனை யோலமிட்டு
வெள்ளம் படர்சடை வேங்கட வாவிட் டிடுதிகண்டாய்
வெள்கலின் றென்னுள் விளங்குக வென்றுமென்
விண்ணப்பமே.

நெஞ்சத்தில் தீய எண்ணம் கொண்டவர்களால் காணமுடியாத ஞானக் கதிரவனாம் ரமணன், எளிய எனது உள்ளத்தே தானே புகுந்து ஒளிர்ந்து என்னை ஆண்டான்! கங்கை வெள்ளம் பெருகி ஓடும் சடைமுடியைக் கொண்ட சிவ ஸ்வரூபமான ரமணனே! என்னை ஏன் மீண்டும் விட்டுவிட்டாய்? நீ என்னை விட்டுவிட்டதை எண்ணி வெட்கப்படக் கூட எனக்குத் தெரியாதே! நீயாகவே வந்து என் இதயத்தில் மீண்டும் விளங்க வேண்டும் என்று வேண்டுகிறார் முருகனார்.

*இவ்வுலகில் நாம் காணும் பொருள் யாவும் காலம், இடம் என்ற இரண்டு காரணிக்குள் அடங்குகின்றது அல்லவா? எம்மான் ரமணனும் இந்தக் காரணிக்கு உட்பட்டவனா? அவனை எங்கே தேடுவது? எப்போது அடைவது என்ற கேள்விகட்குத் திருவம்மானைப் பாடல் வழியாகத் தானே பதிலிறுக்கிறார் முருகனார்.*

*முன்னுக்கு முன்னா முதலோனை மூவர்முடிப்*
*பின்னுக்கும் பின்னாம் பெரியோனைப் பேராமை*
*என்னுள்ளும் யானென் றிருந்தோனை மற்றேனைத்*
*தன்னுள்ளுந் தானாத் தரித்தோனை வேங்கடனைப்*
*பொன்னுக்கும் பொன்னாய புண்ணியனை மோனத்தாற்*
*பன்னாது பன்னிநாம் பாடுதுங்கா ணம்மானாய்.*

*(ரமண சந்நிதிமுறை, 1489)*

*ரமணபிரான் முன்னுக்கும் முன்னான முதல்வன். யாதும் தோன்றுதற்கு முன்பே தோன்றிய தனிப்பெரும் முதல்வன். இக்கால விஞ்ஞானக் கண்டுபிடித்தலின்படி இந்தப் பிரபஞ்சம் தோன்றுதற்கு முன்னரே அனைத்தும் ஒரு அளப்பற்கரிய சக்திக் கூறாய் அணுவிற்கு அணுவாய் இருந்தது (*singularity*). அந்த நிலையிலிருந்து அளவற்ற சக்திக்கடல் எழுந்தது. அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட நிலையில் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மறைகள் கூறும் மூன்று வகை (விஞ்ஞானத்தில் போஸான் எனப்படும்) ஆற்றல் அலைகள் வெளிப்பட்டு பிரபஞ்சம் தோன்றுகிறது. இறுதியில் பிரபஞ்சம் அனைத்தும் உள்வாங்கப்பட்டு அந்த ஆற்றல் பெருங்கடலில் அடங்குகிறது. இறுதியில் அந்தத் தனிப்பெரும் முதல் மட்டுமே நிற்கிறது. இதனையே,*

*முன்னுக்கு முன்னா முதலோனை மூவர்முடிப்*
*பின்னுக்கும் பின்னாம் பெரியோனை*

*என முருகனார் குறிப்பிடுகிறார். மூவர்கள் தோன்றி அழிந்தபின்னரும், தனித்துவமாய் நிலை பெற்று இருப்பவன் என்பது வாயிலாகத் தோற்றம், நிலைபெறல்,*



அழிதல் என்ற மூன்று நிலைகளையும் கடந்தவன். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களையும் கடந்தவன் பகவான் என்பதை விளக்குகிறார் முருகனார்.

எங்கே இருக்கிறான் இம் முழுமுதல் பொருளான ரமண நாயகன்? எங்கேயும் போய்த் தேட வேண்டாம். அவன் நம்முள்ளேயே இருக்கிறான் என்கிறார் முருகனார். அவன் உள்ளே வந்தவுடன் என்னை வெளியேற்றி விட்டான்.

எனக்கே ஆட்செய் எந்நாளும் என்று
என் மனக்கே புகுந்து இடைவீடின்ற மன்னி

என்று ஆழ்வார் பாடுகிறார் அல்லவா! ரமணன் என் உள்ளே புகுந்து, "எங்கே சிறிது இடைவெளி விட்டாலும் அகந்தை அந்த இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, மீண்டும் என்னைப் பழைய வழிகளில் செலுத்தி விடுமோ" என்று எண்ணி, ஒரு சிறிதும் இடைவெளி இல்லாமல் என் இதயம் முழுதும் நிரம்பி விட்டான். அப்போது நான் போனது எங்கே? எங்கேயும் இல்லை. என்னைத்

தன்னுள்ளே ஈர்த்து ரமணன் அடக்கிக் கொண்டானாம். எப்படி அக்னிக்குள் சென்ற மரச்செதில் உடனே அழிந்து போகிறதோ அதேபோல், அவன் என்னைத் தன்னுள்ளேயே ஈர்த்தவுடன் இந்தச் சிறிய 'நான்' முற்றிலும் அழிந்து போனது. அதேசமயம் அவனுடன் ஒன்றானது. இந்த உண்மை 'நான்' - ஜீவபோதம் அழிந்தபின் விளங்கும் சிவபோதம். இந்த அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்திக்கிறேன். இது உன்னால் நானடைந்த பேறல்லவா என்று பாடுகிறார் முருகனார்.

என்னுள்ளே யுன்னை யிருத்தினாய் போலேநன்
றுன்னுள்ளே யென்னை யொடுக்கினாய் – நின்னுள்ளி
நானற் றொழிந்ததை நான்கண் டமைந்ததே
நானுற்ற பேறுநின் னால்.

(ரமண சந்நிதிமுறை, 1271)

இதனையே 'சும்மா இருத்தல்' எனப் பகவான் குறிப்பிடுகிறார்.

சுகக்கடல் பொங்கச் சொல்உணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா

இந்தச் சும்மா இருக்கும் நிலையையே பகவான் ஆன்ம விசாரச் சிந்தனை நான்காவது சரணத்தில்,

சொல்மா னததனுவின் கன்மா திசிறிதின்றிச்
சும்மா அமர்ந்துஇருக்க அம்மா அகத்தில்ஆன்ம —
சோதியே;

என்று குறிப்பிடுகிறார். இதனையே

'பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறமெழ உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டு என் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்

என்று ஆழ்வார் பாடுகிறார்.

இச் சும்மா இருத்தல் என்பது நமது இயல்பான ஸ்வபாவ நிலை. அதில் நிற்பதற்குச் செய்ய வேண்டியது எல்லாம் எதுவும் செய்யாதிருத்தலே! எதுவும் செய்யாது இருத்தல் என்றால் செயலற்று இருப்பது அல்ல. எந்தச் செயல் செய்யும்போது, இதை நான் செய்கிறேன் என்கிற தற்போத எழுச்சியின்றி அதன்போக்கில் செயலாற்றுவதே. 'சும்மா இருப்பது மனதை ஆன்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வதே' என்று பகவான் 'நான் யார்?' நூலில் கூறுகிறார். மனம் அல்லது அகந்தையானது அது கவனிக்கப்படும்போது அது எழாது அடங்குகிறது. அந்நிலையில் அதை விடாது பின்பற்றி அதன் மூலத்தில் ஒடுங்கச் செய்யவேண்டும். முன்னிலை படர்க்கையில் இருந்து மீண்டு, தன்மையை நமது கவனம் பற்றிக் கொள்வதே சாதனை.

தன்மையை நோக்கி அந்தச் சலமனம் திரும்புமாகில்
இன்மையாய் தன்மை நீங்க, இருப்பது விளங்க

(சாதனை சாரம், 244)

மனத்தின் உருவை மறவாது உசாவ
மனம்என ஒன்றிலை உந்தீபற
மார்க்கம்நேர் ஆர்க்குமிது உந்தீபற.

(உபதேச உந்தியார், 17)

இங்ஙனம் இடைவிடாது 'மனம் என்பது என்ன? நான் யார்' என்று ஒரு கணமும் விடாது விசாரிக்க மனம் என்று ஒன்று இல்லாமல் ஒடுங்குகின்றது. அது எங்கே போனது! அது பகவானால் ஈர்க்கப்பட்டு பகவானிலேயே ஒடுங்குகிறது. இதுவே ஒழிவில் ஒடுக்கம்.

ஆனால் இதற்கு ஆயத்தமாகு முன்னர் சாதகன் உள்ளத்தே ஐயம் எழலாம். நான் எவ்வளவோ தீவினை செய்திருக்கிறேனே. எள்ளளவும் நல்வினை ஒன்றும் செய்யவில்லையே! எப்படி எனக்கு பகவானின் அருள் சித்திக்கும்? என்ற ஐயம் எழலாம். பகவான் அருள் என்பதே நமக்குத் தகுதி இருப்பதால் அளிக்கப்

படுவதில்லை. அவனது அளவற்ற அன்பினால் அளிக்கப்படும் அருட்கொடை அது. எந்த நிமிடம் நாம் நமது தவறான வாழ்க்கை வழியை வகுத்து நல்வழி நாட வேண்டும் என்று எண்ணுகிறோமோ அப்போதே அவனது அருள் வந்து நம்மீது குவிகிறது. எவ்வளவு தவறு செய்திருப்பினும் பகவானது பேரருளால் அவை எரிக்கப்படுகின்றன. நாம் செய்ய வேண்டியது எல்லாம் மனச் சுத்தியோடு அவனைப் பூரணமாய் சரண் புகுவதே. இதைத் தாயுமானவர் ஓர் அழகிய பாடலில் விளக்குகிறார்.

காகமானது கோடி கூடிநின்றாலுமொரு
கல்லின்முன் எதிர்நிற்குமோ
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுமுன்
கருணைப்ரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ

சிந்தைக்கும் வெகுதூரம்! நான்
ஏகமாய் நின்னோடிருக்கு நாள் எந்தநாள்
இந்நாளில் முற்று உறாதோ!
இகபரம் இரண்டிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே

(தாயுமானவர் - எங்கும் நிறைகின்ற பொருள் - 6)

காகங்களானது கோடிக்கணக்காய் கூடி ஒருங்கு நின்றாலும் ஒருகல் எறியப்பட்டபோது அவை அதன்முன் எதிர்த்து நிற்க முடியுமோ? அவை பறந்து ஓடிவிடும். அதுபோல் நான் முற்காலங்களில் கோடிக்கணக்கான தீவினைகளைச் செய்திருந்தாலும் உன்னுடைய பெரும் கருணையாகிய வெள்ளப் பெருக்கின் முன்னர் அவை நிற்கும் வல்லமை உள்ளதா? (இல்லை). இந்நிலை வர ஒரே தேவை அவனது அருளைப் பெறும் பெரிய தாகத்துடன் அவனைப் பிரார்த்திப்பதுதான். அதைப் பிரார்த்திக்கும் வழியையும் தாயுமானவர் கூறுகிறார்:

'தாகமாய் உன் அருள் நாடுதல்'

அளவற்ற அன்புடனும் பணிவுடனும் அருள் தாகம் கொண்டு அவனை வேண்டுதலே அது.

"சகஜ நிஷ்டைக்கும் என்
சிந்தைக்கும் வெகுதூரம். நான்
ஏகமாய் நின்னோடிருக்கும் நாள் எந்த நாள்?
இந்நாளில் அது முற்றுறாதோ?"

என்பது பிரார்த்தனை.

ஆத்ம விசாரத்தில் நான் முதிர்ச்சி அடைந்து, இயல்பாய் சகஜ சமாதியில் இருக்கும் நிலைக்கும், என்னுடைய இப்போதைய நிலைக்கும் வெகு தூரமல்லவா? நான் உன்னுடன் ஒன்றாகும் நாள், எந்த நாள்? அந்த நாள் இன்றே வராதா? என்பதே அந்த ஆத்ம தாகம் கொண்ட பிரார்த்தனை.

"சிறை உறா வெள்ளம்போல் சிந்தைவாய் பாயும், இந்த அருள் வெள்ளத்தைப் பகவானின் அருள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி விளக்குகிறது. கிருஷ்ணபிக்ஷு இதை ஒரு நாடகம்போல் வர்ணித்துள்ளார். பகவான் யாருக்கும் தன்னை குரு என்று கூறிக் கொண்டதில்லை. யாரையுமே தனக்குச் சிஷ்யனாக ஸ்வீகரித்துக் கொண்டதுமில்லை என்பதே வழக்கமான ஒன்று. எல்லோருக்கும் குரு உண்மையில் அவர் அவர்களது ஆத்மாவே; அதனையே சரணடைக என்பதே அவர் திருவாக்கு. இதற்கு மாறாக ஒருவரைச் சீடனாக ஏற்று அவரிடம் குரு தட்சணையும் பெற்றுள்ளார் பகவான். இதைக் காண்போமா?

ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த, பெயர் குறிப்பிடப்படாத அன்பர் பகவான் முன்னர் நின்று கொண்டிருக்கிறார். அவரது கண்ணில் நீர் ஆறாகப் பெருகுகிறது. நெக்குருக அவர் பிரார்த்திக்கிறார். "பகவானே! உங்களையே நான் என் சற்குருவாக வரித்துள்ளேன். மாதக்கணக்கில் உங்களையே தியானித்து

சரண் அடைந்துள்ளேன். உங்களுக்கு என்மேல் கருணையே இல்லையா? என்னை ஏன் அங்கீகரித்துக் கருணை காட்டமாட்டேன் என்கிறீர்கள்? நீங்கள் எனது ஸத்குரு அல்லவா?” என்று மனம் உருகப் பிரார்த்தித்தார்.

பகவானோ, அசையாத அருணாசலக் கற்பாறையாக அசைவின்றி வீற்றிருந்தார். இந்த ஆழ்ந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் குறிப்பாக எந்தச் சலனமும் அந்த எழில் வதனத்தில் தெரியவில்லை. மீண்டும், மீண்டும் அந்த அடியார் வேண்டிக்கொண்டே இருந்தார். பகவான், ஏன் அய்யா! நான் எப்போதாவது ‘நான் உங்கள் குரு, நீங்கள் எனது சிஷ்யன்’ என்று கூறி இருக்கிறேனா? நீங்களே அப்படி எண்ணிக்கொண்டு, நான் கருணை காட்டவில்லை என்று அழுதால், நான் என்ன செய்யட்டும்?’ என்று கூறினார்.

அவ்வளவுதான் அந்த அடியவர், அடியோடு உடைந்தே விட்டார். கண்ணீர் ஆறாகப் பெருகத் தரையில் வேரற்ற மரம் போல் சாய்ந்து விட்டார். ‘ஐயோ! நான் என்ன செய்வேன்? இதுகாறும் நான் குரு என்று ஸ்வீகரித்துக் கொண்டிருந்த பகவான் இப்படி என்னைக் கைவிட்டு விட்டாரே!’ என்று அரற்றினார்.

இதுகாறும் அருணாசல கல்மலையாய் இருந்த பகவானின் உள்ளம் அருள்நிறைவான அமுதக்கடலாய் மாறத் துவங்கியது. மந்தஹாசம் பொலியும் முகத்துடன், ‘சரி, ஐயா! நான் உங்களை என் சீடனாக ஏற்றுக் கொள்கிறேன். நான் குருவானால் எனக்கு குருதட்சணை தரவேண்டுமே? குரு தட்சணையாக என்ன தருவீர்கள்?’ என்று கேட்டார்.

அதனைக் கேட்டவுடன் அன்பர் மனதில் பெருமகிழ்ச்சி பொங்கியது. பகவானே! நீங்கள் என் சத்குருவான பின்னர் எனக்கு வேறு எது வேண்டும்? எனது உடல், பொருள், ஆவி அனைத்தும் உங்களுடையதே! எதைக் கேட்டாலும் தருகிறேன்’ என்றார். பகவானோ, கறாராக,

*"எதைக் கேட்டாலும் தருகிறேன் என்கிறீர்களே! பின்னர் பேச்சு மாறக்கூடாது. நான் எதைக் குருதட்சணையாகக் கேட்டாலும் மறுக்காமல் தரவேண்டும்" என்றார். மகிழ்ச்சியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் அன்பரோ, 'அப்படியே பகவானே! எதைக் கேட்டாலும் தருகிறேன்' என்றார்.*

*பகவான் புன்முறுவல் தவழ, "இதோ சப்-ரிஜிஸ்திரார் சாட்சியாக உள்ளார். நாம் நமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். நான் சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்லும்!" என்றார் பகவான்.*

*அன்பர்: அப்படியே பகவான்!*

*பகவான்: சரி! சொல்லும், 'இதுவரை நான் செய்த புண்ணியங்கள் அனைத்தும் எனது குருவான பகவானுக்குக் குரு தட்சணையாகக் கொடுக்கிறேன்'.*

*அன்பருக்கு நிரம்ப சந்தோஷம். நாம் எண்ணியது இவ்வளவு 'சீப்' ஆக முடிந்துவிட்டதே! நான் செய்துள்ள புண்ணியம் மிகக் குறைவு. 'தந்தது எத்தனை! கொண்டதோ உன்தனை! சங்கரா! ஆர்கொலோ சதுரர்' என்று மாணிக்க வாசகர்போல் எண்ணியபடி 'எனது புண்ணியங்களை பகவானுக்குக் குருதட்சணையாகக் கொடுக்கிறேன்' என்று பகவானின் வாக்கியத்தையே திரும்பச் சொன்னார். சந்தோஷத்துடன் 'பகவானே! இந்தக் குருதட்சணை சடங்கு முடிந்து விட்டதல்லவா?' என்றார்.*

*பகவான்: எங்கே ஐயா முடிந்தது? பாதிதானே ஆயிற்று! மீதிப் பாதியையும் கொடுக்க வேண்டாமா? இப்போது நான் சொல்வதைத் திருப்பிச் சொல்லும். 'நான் இதுவரை செய்துள்ள பாவங்கள் அனைத்தையும் எனது சற்குருவான பகவான் ரமணருக்கு குரு தட்சணையாகக் கொடுக்கிறேன்!'*

*அன்பருக்குப் பயங்கர 'ஷாக்'. உடனே அரற்றத் தொடங்கி விட்டார். 'பகவானே! புண்ணியத்தை ஏற்றுக்*

கொண்டது சரி. நான் செய்த புண்ணியங்கள் மிகக் குறைவு. ஆனால் நான் செய்த பாவங்களோ அனந்தகோடி. அதைத் தாங்கள் ஏற்றுக் கொண்டால் அந்தப் பாவ மூட்டைகளின் கனம் பகவானையே அழுத்தி விடும். எனவே எனது பாவத்தை குருதட்சணையாகக் கேட்காதீர்கள்' என்றார்.

"அதெல்லாம் முடியாது ஐயா! கொடுத்தால் பாவம், புண்ணியம் இரண்டையும் குருதட்சணையாகத் தரவேண்டும். முடியாது என்றால் இரண்டையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நம் ஒப்பந்தம் முறிந்தது. உமது வழியே நீங்கள் போய்க் கொள்ளுங்கள்!" என்றார் பகவான். பகவானின் சீடராகும் பெரும்பேற்றை இழக்க விரும்பாத அன்பர், 'சரி பகவானே! உங்கள் கட்டளைப்படியே செய்கிறேன்'. இதுவரை நான் செய்த பாவங்கள் அனைத்தையும் எனது குருவான பகவான் ரமணருக்கு குருதட்சணையாக அளிக்கிறேன்!' என்று நடுங்கும் குரலில் கூறினார்.

புன்னகையுடன் அதை ஏற்றுக்கொண்ட பகவான், "சரி! போம்! நீங்கள் இப்போது க்ளீன் ஸ்லேட்! உங்களிடம் பாவமும் இல்லை! புண்ணியமும் இல்லை!" என்றார். ஞான கங்கையாய்ப் படர்ந்து, தனது கர்ம மூட்டை அனைத்தையும் அழித்த பகவானின் பேரருளைப் பெற்ற அந்த அதிர்ஷ்டசாலியான அன்பர், நிர்மல முகத்துடன் பகவானை வணங்கி விடை பெற்றார். அவரை மீண்டும் ஆச்ரமத்திலேகூடக் காண முடியவில்லை" என்கிறார் கிருஷ்ண பிக்ஷு. தம் கர்மம் முழுவதையுமே பகவானின் திருவருளால் நீக்கிய பின்னர், வேறு ஏதும் தேவையா என்ன? அந்த அன்பர் ஆத்மசாட்சாத்காரத்திலேயே திளைத்துக் கொண்டிருப்பார் அல்லவா?

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்விலும் இதே போன்ற ஓர் அருள் நிகழ்ச்சி நடந்துள்ளது. பல தீய பழக்கங்களில் ஆழ்ந்திருந்த கிரிஷ் சந்திரகோஷ் என்ற

*நாடக நடிகரிடம் ஸ்ரீராமகிருஷ்ணர், "உனது கர்மங்கள் அனைத்திற்கும் எனது குரு ராமகிருஷ்ணரே பொறுப்பு" என்ற 'வக்காலத் நாமா'வை (*power of attorney*) எனக்குக் கொடுத்துவிடு! அதன்பின், என்ன வேண்டுமானாலும் செய்து கொள்!" என்றார். ஆஹா! தொல்லை விட்டது! எல்லாவற்றிற்கும் குருவே பொறுப்பு ஏற்றுக் கொள்வார். நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாமே! என்று எண்ணி, 'வக்காலத் நாமா' கொடுத்த கிரிஷ் சந்திரர், தமது மனப்பாங்கில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டதைக் கண்டார். அதுமுதல் தீய பழக்கங்கள் தாமாகவே நீங்கிய அவர் மனம் இறைவனிடமே லயிக்கத் துவங்கியது. பெரும் ஞானியாய் உயர்ந்தார், கிரிஷ் சந்திரர்.*

*பகவான் கூறுகிறார்: "கடவுளே குருவின் திருவுருவம் கொண்டு தம் பக்தனைக் கரையேற்ற வருகிறார். அவனுக்கு உண்மை என்ன என்பதை உணர்த்தி, தம்முடைய உபதேசத்தாலும் தொடர்பினாலும் அவனுக்கு சித்த சுத்தி உண்டாகும்படி செய்கிறார். மனம் தூய்மை பெற்ற பக்தன், உண்முக நாட்டத்தில் தியானம் செய்கிறான். அப்போது மனம் சற்றும் சலனம் இன்றி நிற்கிறது. மனோநாசம் அடைந்தபின் ஆத்ம தரிசனம் உண்டாகிறது. குருவின் திருவருளால் இது கைகூடுகிறது. குரு வெளியிலும் இருக்கிறார். உள்ளேயும் இருக்கிறார். வெளியிலிருந்து மனம் உள்முகமாகத் திரும்பும்படித் தள்ளுகிறார். உள்ளிருந்து மனதைத் தன்வசம் இழுத்துக் கொள்கிறார். இதுவே குருவின் கிருபை" (ரமண மாமுனிவர் - கி.வா.ஜ. ப. 83)*

*தாயுமானவர் தனது சின்மயாநந்த குரு வணக்கம், ஏழாவது பாடலில், கருப்பையில் இருந்து தோன்றி, வளர்ந்து, உலோகங்களை புடம் போடுவதற்குப் பயன்படும் மூசை என்ற சிறுகலம் போன்றது, இந்த உடம்பு. இதனுள்ளே களிம்பினால் பொலிவு இழந்த செம்பு போன்று, அகங்காரத்தில் என் இயல்பை இழந்து*

'நான்' இருந்தேன். நீ என் உள்ளத்தே ஞானத்தீயை மூட்டி, செம்பைப் பக்குவமாக உருக்குவதுபோல என்னைப் பக்குவமாக்கி, சரியான நேரத்தில், செம்பைப் பொன்னாக்கும் குளிகையை உருகும் செம்போடு சேர்ந்து, உன்னுடைய திருவருளாகிய குளிகையால், என்னுடைய மாசு போக்கி, பத்தரை மாற்றுப் பசும்பொன்னாக்கி என்னைப் பணிகொண்ட உனது பேரருளை எப்படி வியந்து கூறுவேன்!" என்று பாடுகிறார். பகவான் பேரருள் இங்ஙனம் வந்து காத்த பின்னர், "ஆடாமல் நின்று விட்ட பம்பரம்போல மனமானது விசை ஒடுங்கி வீழவும், அறியாமையான இருள் நீங்கவும், இருள், ஒளி இரண்டும் இல்லாத அருள் வெளியோடு அத்வைதமான என்னைக் கண்டு என்னுள்ளே இருக்கும் சாந்த வெளியாகும் பரம்பொருளாகிய பேரின்பநிலை" என்று தாயுமானவரின் தேஜோமயாநந்தம் நான்காவது பாடல் கூறுகிறது.

இங்ஙனம் பகவானால் பரமனைச் சரண்புகுந்து தனது ஆணவமாம் தற்போதம் முற்றிலும் அழிந்த முருகனார் போன்ற பேரடியார்கள் வாழ்க்கை நமக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. நமது ஆச்ரமத் தலைவர், சுந்தரம் அண்ணா, ஒருமுறை என்னிடம் கூறினார்: "முருகனார் பகவான்மீது கொண்ட பக்தி அளவிடற்கரியது. ஒருமுறை பகவானைப் பற்றி நான் ஒரு விளக்கம் கேட்டபோது 'பகவான்' என்று ஆரம்பித்த அவர் வாய் 'பகவா' என்ற அரைகுறை சொல்லுடனேயே நின்றுபோனது. அவர் விழிகள் நிலைகுத்தி நின்றன. அவரது உடல் உணர்ச்சியே அற்றுப் போனது. அவர் முற்றிலும் பகவானிலேயே மூழ்கி விட்டார். அதே நிலையில் பலமணிநேரம் இருந்தார்" என்றார். பகவான் பற்றிய எண்ணம் வந்தாலே அவரது நாமத்தை உள்ளன்புடன் ஒருமுறை உச்சரித்தாலே இத்தகைய ஆழ்நிலை கூடுகின்றதல்லவா? 'யக்ஞாத்வா ஸ்தப்தோ பவதி' (இறைவனை அறிபவன் வெளி உணர்வற்ற சிலை போன்று ஆகிறான்). ஆத்ம நிஷ்டோ பவதி

(ஆத்மாவிலேயே கரைந்து விடுகிறான்) என்று நாரத பக்தி சூத்ரம் கூறும் நிலையை பகவானிடம் முற்றிலும் பக்திகொண்டு சரணடைந்த முருகனார் பெற்றிருந்தார். தியானக் கூடத்தில் பகவான் அமர்ந்திருப்பார்; யாரேனும் சந்தேகம் கேட்பார்கள். பகவான் அப்போது தன்னை நோக்கி சாஷ்டாங்க நமஸ்கார நிலையில் தரையில் எண்சாண் குறுகிப் படுத்திருக்கும் முருகனாரைக் கேட்பார். முருகனார்க்குத் தான் எழுந்திருந்து பதில் சொல்ல வேண்டும் என்று கூடத் தோன்றாது. அப்படியே படுத்த நிலையிலேயே தலையைத் தூக்கி, விளக்கம் கொடுப்பார். “என்ன முருகனாரே! பகவான் கேட்டால் எழுந்திருந்து பதில் சொல்ல வேண்டாமா? இப்படிப் படுத்துக் கொண்டே பதில் சொல்கிறீர்களே! என்று யாரேனும் கேட்டால், ‘நான் என்ன செய்வேன்! பகவான் குரல் என் செவியில் விழுந்தவுடனேயே எனக்கு தேகப் பிரக்ஞையே அற்றுப் போய்விடுகிறது. பகவானுக்கு உடனே பதில் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே தலைதூக்கி நிற்பதால், என்னையே நான் மறந்து விடுகிறேன்’ என்றார். மற்றொருமுறை இமாலய யாத்திரை செல்லும் அன்பர்கள் அவரையும் வரும்படி அழைத்தபோது, எங்கே போய் நான் எதைப் பார்ப்பது? பகவானின் அகண்ட ஜோதி பிரகாசத்தைக் கண்டவுடனேயே எனது ஊனக் கண்கள் குருடாகி விட்டனவே! நான் வந்து எதைக் காணமுடியும்?’ என்று மறுத்துவிட்டார். முருகனாரின் பக்தி உணர்வு அத்தகைய சீரிய ஒன்றாகும்.

இதைக் கூறும்போது மீண்டும் தாயுமானவர்தான் நினைவுக்கு வருகிறார். முருகனார் போன்ற உயர்நிலை பக்தர்களின் நிலையைப் பற்றி தாயுமானவர் பாடுகிறார்.

உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னியுன்னிப்

*படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்*
*பாடியா டிக்குதித்துப்*
*பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை*
*பரப்பியார்த் தார்த்தெழுந்து*
*மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி*
*வானேயவ் வானிலின்ப*
*மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி*
*வாழியென வாழ்த்தியேத்துங்*
*கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை*
*கன்னெஞ்ச னுக்கெளியையோ*
*கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு*
*கருணா கரக்கடவுளே. (கருணாகரக் கடவுள், 9)*

பகவானின் மீது பேரன்பு கொண்டு, செய்யும் தவத்தால் உடல் மெலிந்து, குழையவும், எலும்புகள் கூட அந்த பக்திப் பரவசத்தில் உருகவும், பேரன்புப் பெருக்கால், இரு கண்களில் இருந்தும், கண்ணீர் ஊற்று திறந்தாற்போல பெருக்கெடுத்து ஓடவும், இரும்பால் ஆன ஊசி காந்தத்தின் முன் ஈர்க்கப்பட்டு, அதனை அணுகி இருத்தல் போலவும், ஒப்பற்ற நின் திருவடியை மறவாது, நினைந்து நினைந்து, அது காரணமாக மனம் படபடவென துடித்து உள்ளே ஒடுங்கவும், அதனால் தன் வயம் இழந்து பாடுதலும், ஆடுதலும், துள்ளுதலும் செய்து, குளிர்ந்த நிலவு போன்ற சாந்தமான முகத்தில், நிலவொளி போன்ற புன்னகை விளங்க, இதழ் விரிந்த தாமரைப்போல கைகளை விரித்துக் கூப்பி 'ஞானப் பேரொளியே! அந்த வானத்தில் தோன்றும் பேரின்ப மழையே! மழையின் இடைவிடாத அன்புத் தாரையே! அன்புப் பெருவெள்ளமே! என் சத்குரு நாதனே! நீ நீடுழி வாழ்வாயாக! என வாழ்த்திப் பாடுகின்ற பக்தர்கள் உன்மீது கொண்ட பேரன்புக் கடலானது திறந்த மடையின் வெளியே பாய்ந்து, ஓடுதல்போல உன்னை நோக்கிப் பாய்கிறது. இத்தகைய பேரன்பு கல் நெஞ்சம் உடையவர்களால் முடியுமோ?' என்று

கருணாகரனாகிய சத்குருவை நோக்கி அடியார் மனம் உருகப் பாடுகிறார்.

ரமண திருவெம்பாவையின் முதற் பாடலிலேயே பகவான் தன் அன்பர்கட்கு அருள் வழங்கும் திறம் கூறப்படுகிறது.

*அண்ணா மலைரமண னன்பர்க் கருண்மாரி*
*கண்ணாலே பெய்யுங் கருணைத் திறம்பாடி*
*எண்ணா தனவெண்ணி யேங்கடியர் வெம்பாவத்*
*திண்ணா சறவே தெறுசே வகம்பாடிப்*
*பெண்ணா ணலிகளெனும் பேதத்தை நீத்துத்தம்*
*உண்ணா டுளத்தொளிரு முண்மை வளம்பாடிப்*
*பண்ணா ரவன்புகழைப் பாடுங்கீ தாமுதம்போற்*
*றண்ணா ரமைதி தழையேலோ ரெம்பாவாய்.*

*(ரமண சந்நிதிமுறை, 1453)*

அடியாரை நோக்கி முருகனார் கூறுகிறார்: ‘அண்ணாமலையில் எழுந்தருளியுள்ள பகவான் ரமணன் அடியவர்கட்கு தன் திருக்கண் நோக்கத்தால் அருள் மழையைப் பொழிவிக்கிறார். அந்த ஆறாப் பெருங்கருணையைப் பாடி, எண்ணற்ற எண்ணங்கள் மனதில் எழுந்து குழம்பி நிற்கும் அடியார்கள், தம்முடைய பாவப் பெரும் மூட்டையினால் ஏற்படும் துயரம் நீங்கவும், அவரது அடிகளை வணங்கப் பாடுக! சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பேதங்களை மறந்து உன்னுள்ளே விசாரத்தில் மூழ்கி, அப்போது உணர்கின்ற ஆத்மாவின் உண்மை ஒளியைப் பாடி அதன் மூலம் மனத்தூய்மை அடைந்து, ஆத்மசாட்சாத்காரம் பெற்று அந்தப் பேரமைதியில் திளைத்திருப்பாயாக! என்ற திருவெம்பாவை வரிகளை நினைவு கூர்ந்து, மீண்டும் நமது கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# தியானமும் சமாதியும் – பகவான் திருமொழிகள்

தியானம் என்பது என்ன? சதா கடலின் அலைகள்போல் எண்ணங்கள் எழும்போது அவற்றை அமைதிப்படுத்தி, தூய ப்ரக்ஞை உணர்விலே மனதை ஆழ்த்திக் கரைத்து எண்ணமற்ற சாந்த நிலையை அனுபவிப்பதே. ஆரம்ப கால சாதகர்க்கு இது ஒரு சிரமமான வேலையாய்த் தோன்றலாம் இருப்பினும், பகவான் அவர்களை தியானப் பாதையில் துவங்கி, விடாமல் பயணிக்குமாறு கூறுகிறார். அவர் உபதேசமாவது: தலையினை மையமாக வைத்து தியானம் செய்தால் தலைவலி போன்ற பிரச்சினைகள் தோன்றலாம். சித்தம் நிலையில் நிற்பதும் கடினம். இதயத்தைக் கூர்ந்து தியானித்தால் அது முறுக்கேறிய உணர்ச்சிகளிலிருந்து மனத்தைத் தளர்த்தி, சுகமான தியானத்தில் ஈடுபடச் செய்கிறது. தியானத்தைத் தடுத்து உள்ளே நுழையும் எண்ணங்கள் யாவற்றையும் மிருதுவாக வெளியே தள்ளுங்கள். கடினமான முயற்சி வேண்டாம். மெல்லச் செய்யப்படும் முயற்சி உங்களுக்கு வெற்றியைத் தரும்.

தியானிக்கும்போது உள்ளே படையெடுக்கும் எண்ணங்களை மிக நுட்பமாகக் கவனிக்கும் நுண்ணிய கவனம் தேவை. ஆரம்ப காலத்தில் எண்ணங்களை அகற்றி தியானத்தில் ஒருமுகத்துடன் ஈடுபட அதிக முயற்சி தேவைப்படும். ஆயினும், தியானத்தில் இடைவிடாது ஈடுபட ஈடுபட, முயற்சி ஏதும் தேவைப்படாமல், மனம் ஒருமுகத் தியானத்தில்

---

*(எஸ்.எஸ். கோஹன் எழுதிய 'குரு ரமணா' என்ற ஆங்கில நூலிலிருந்து...)*


எஸ்.எஸ். கோஹன்

மூழ்குகிறது. தியானத்தில் ஈடுபட மந்த்ர ஜபம் தேவையா என்ற கேள்விக்கு பகவான் விடையிறுக்கிறார், "தான் என்ற உணர்வுதான் எல்லாவற்றிலும் சிறந்த மந்திரம். உன்னுள்ளே சதா ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த மந்திரத்தை நீங்கள் உணரவில்லை எனில், அந்த 'தான்' என்பதையே ஒரு மந்திர ஜபம் போல் செய்து வருக. இந்த 'நான், நான்' என்பதையே இடைவிடாது மந்திரம்போல் ஜபித்துக் கொண்டு இருந்தால், அது மற்ற எல்லா எண்ணங்களையும் நிறுத்தி விடுகிறது. இந்த 'நான்' என்பதை இடைவிடாமல் கவனித்துச் சொல்லும்போது, காலப்போக்கில் அது நம்முள்ளே இடைவிடாது உணர்கிற பிரக்ஞை உணர்வே என்பதை அறிகிறோம். அப்போது முயற்சி ஏதுமே தேவைப்படாமல் ஆத்மாவிலே ஆழ்கிறோம். அசைக்க முடியாத உறுதியுடன் இந்தப் பயிற்சியில் ஈடுபடும்போது நீங்கள் எந்த வேலையில் ஈடுபட்டாலும் சரி, ஆழ்மனம் வேறு எதையும் சிந்தியாது. இந்த ஆத்ம தியானத்திலேயே ஈடுபட்டு இருக்கும். வேத கோஷத்தையும், மந்திர ஒலியையும் கேட்டதும் உணர்வுடன் ஜபத்தைச் செய்யும் அதே பலனைத் தருகிறது. அதன் ஒலிநயத்துடன் ஒன்றுவதே ஜபம்தான்."

"எங்களை எல்லாம் 'நான் யார்' என்று வினவச் சொல்கிறீர்கள். இது இறுதியில் எங்களை எங்கே கொண்டு சேர்க்கும்" என்ற கேள்விக்கு பகவான் பதிலிறுக்கிறார், "'நான் யார்' என்பது வெறும் கேள்வி அல்ல, 'நான் யார்' என்ற தேடுதலின் பொருள் என்ன என்பதை உணர வேண்டும். பலர் தமது உடலின் பல்வேறு மையங்களில் அல்லது சக்கரங்களில் மனதை

வைத்து தியானித்து அவற்றுடன் ஒன்றிட முயல்கிறார்கள். ஆயினும், சிலகாலம் கடந்த பின்னர் அவர்கள் 'நான் யார்' என்ற விசாரத்தில் இறங்கித்தான் ஆக வேண்டும். அதுவே இறுதியில் அவர்கள் அடையும் மார்க்கம். அப்படி இருக்கும்போது ஏன் நேரடியாகவே 'நான் யார்' என்று விசாரித்து உங்கள் மூலத்தில் ஒடுங்கக் கூடாது?"

ஒரு சாதகர் கேட்ட வினா: மனிதனின் உடலில் ஒரு ஊசிமுனை போன்ற துளை இருக்கிறது. அதனின்றும் பிரக்ஞை உணர்வு வெளிப்பட்டு பொங்கி வருகின்றது என்பது உண்மையோ? அத்துளை எப்போதும் திறந்துள்ளதா அல்லது முடி உள்ளதா?

பகவான்: சித்ஜடக் கிரந்தி எனப்படும் அது அறியாமை முடிச்சாகும். அது உடலை பிரக்ஞையுடன் இணைக்கும் முடிச்சு. அது எப்போதும் மூடியே உள்ளது. ஆத்ம சாதனையில் ஒருவன் முன்னேறி கேவல நிர்விகல்ப சமாதி நிலையை அடையும்போது அது தற்காலிகமாகத் திறந்து கொள்கிறது. ஆனால் மறுபடியும் மூடிக் கொள்கிறது. அவன் அந்த மன விகாரங்கள் முற்றிலும் மறையும்போது நிர்விகல்ப சமாதி சித்திக்கிறது. நிரந்தரமாக அந்த ஆதார நிலையில் முயற்சி ஏதும் இல்லாமலேயே சதா நிலைத்திருப்பது ஸஹஜசமாதி. ஒரு வாளி, தன்னைப் பிணைத்த கயிறுடனேயே கிணற்றின் ஆழத்தில் மூழ்கி விடுதல்போல ஸஹஜ சமாதியில், மனம் முற்றிலுமாக ஆத்மாவில் ஒடுங்கி விடுகிறது. அதில் ஒன்றுமேயில்லை. அது கிணற்றுக்கு வெளியில் இழுக்கப்படுவதும் இல்லை. அதுபோலவே, ஸஹஜ சமாதியில் மனம் முற்றிலும் ஆத்மாவில் மூழ்கி, மீண்டும் வெளிப்படுவதே இல்லை. கேவல நிர்விகல்ப சமாதியில், மனமாகிய வாளி கிணற்று நீரின் அடிவாரத்தில் உள்ளது. அதை எக்கணமும் வெளியே இழுத்து விடலாம். ஸஹஜ சமாதியில் ஜீவன், சமுத்திரத்தில் கலந்த ஆறுபோல, ஆத்மாவில் கலந்து விடுகிறது. அதிலிருந்து மீண்டும் பிரிவதே இல்லை.

சச்சிதானந்த தியானத்தில் அனுபவித்த ஒருவன், வெளி உலகிற்கு மீண்டபின் மறுபடியும் உடல்-மனத்துடன் தன்னை மீண்டும் ஈடுபடுத்திக் கொள்வானா என்ற கேள்விக்கு பகவான், “ஆம்! ஆத்மாவை அனுபவத்தில் அறிந்த ஒருவன் மீண்டும் தன்னை உடல்-மனமாய்க் காண்பது சாத்யமே. ஆயினும் அவன் படிப்படியாக அந்த உடல்-மனத் தொடர்பு நீங்கி, ஆத்மாவிலேயே நிலைக்கத் துவங்குவான்.

# இனிவரும் திருநாட்கள் – 2014

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 14 | செவ்வாய் | பொங்கல் |
| | 15 | புதன் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 7 | வெள்ளி | ரமணபுராண அரங்கேற்ற நாள் |
| | 19 | புதன் | சுந்தரம் ஐயர் தினம் |
| | 27 | வியாழன் | மகா சிவராத்திரி |
| மார்ச் | 21 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| | 31 | திங்கள் | தெலுங்கு வருடப் பிறப்பு |
| ஏப்ரல் | 8 | செவ்வாய் | ஸ்ரீ ராம நவமி |
| | 14 | திங்கள் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 27 | ஞாயிறு | பகவான் ரமணரின் ஆராதனை |
| மே | 22 | வியாழன் | மகா பூஜை |
| ஜூலை | 9 | புதன் | பசு லட்சுமி தினம் |
| | 11 | வெள்ளி | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | திங்கள் | அருணை விஜய தினம் |
| | 25 | வியாழன் | நவராத்திரி தொடக்கம் |
| அக்டோபர் | 2 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 4 | சனி | விஜயதசமி |
| நவம்பர் | 27 | வியாழன் | கார்த்திகை தீப விழாத் தொடக்கம் |
| டிசம்பர் | 5 | வெள்ளி | கார்த்திகை தீபம் |

# உத்தமனுடன் உரையாடல்

## நொச்சூர் வெங்கடராமன்

## தமிழாக்கம்: கௌதமன்

*எம் தலைவ! சாந்தி அடைவது எங்ஙனம்?*
ஆணவத்தை அழிப்பதன் மூலம்!
*எம் தலைவ! ஆணவத்தை அழிப்பது எங்ஙனம்?*
இன்றே, இப்பொழுதே என்னிடம் சரணடைவதின் மூலம்!
*எம் தலைவ! உன்னைச் சரண் அடைதல் எவ்வாறு?*
"நான் ஒரு அஸக்தன்" என்று அறிவதன் மூலம்!
*எம் தலைவ! நான் ஆதரவற்ற அஸக்தன் என்பதை எப்படி அறிவது?*
அருள்தாரையில் இடைவிடாது நனைவதன் மூலம்.
*எம் தலைவ! அருள் எப்போது உதிக்கும்?*
நீ உன்னுடைய முயற்சிகளில் தோற்கும்போது!
*எம் தலைவ! இம் முயற்சி என்பது எது?*
உள்ளத்தையும், உடலையும் தூய்மை ஆக்கலே!
*எம் தலைவ! எப்படி உள்ளத்தைத் தூய்மையாக்குவது?*
பக்தி மற்றும் தன்னலம் இன்மையால்
*எம் தலைவ! தன்னலமின்மையை எப்படி அடைவது?*
அஹங்காரத்தின் செயல்பாடுகளை இடையறாது கவனித்தலால்
*எம் தலைவ! பக்தியை எங்ஙனம் பெறுவது?*
இடையறாது என்னை எண்ணுதலால்!
*எம் தலைவ! எங்ஙனம் உன்னை எண்ணுவது?*
என்னுடைய திருநாமத்தை ஜபிப்பதன் மூலம்!
*எம் தலைவ! ஜபிக்கும் திறனை எங்ஙனம் பெறுவது?*
ஜபத்தில் ஆழ்ந்திருக்கும் எம்பக்தர் தொடர்பால்!
*எம் தலைவ! உன் பக்தர்களை எங்ஙனம் அறிவது?*
அவர்தம்மைச் சூழ்ந்திருக்கும் அன்பு மற்றும் சாந்தியின் மணத்தால்!

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீபகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீபகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

*எதனிடையிற் செய்கின்ற வாத மில்லை*
*யெதனிடையிற் செயாபசெய மெவையு மில்லை*
*யெதனிடையில் வாச்சிய வாசகமு மில்லை*
*யெதனிடையில் வசனிக்கும் வாக்கு மில்லை*
*யெதனிடையில் சீவபர பேத மில்லை*
*யெதனிடையிற் செறியுமுபா திகளு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்*

***(26/17)***

*எதனிடையிற் சிரவணமே யாதி யில்லை*
*யெதனிடையிற் செறிகின்ற சமாதி யில்லை*
*யெதனிடையிற் சசாதீய பேத மில்லை*
*யெதனிடையிற் விசாதீய பேத மில்லை*
*யெதனிடையிற் சுகதமெனும் பேத மில்லை*
*யெதனிடையிற் சொற்பொருள்க ளெவையு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவுமின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்*

***(26/18)***

*வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 77-78] கே: பிரஹ்மம் ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத பேதங்கள் எதுவுமற்றதென்பது விவர்த்த வாதத்தில் நன்கு ஸித்திக்கிறது. பரிணாம வாதத்திலோ ஸ்வகத பேதத்திற்கு இடமிருக்கிறது. இவை ஒன்றோடொன்று எப்படிப் பொருந்தும்?*

*ஸ்ரீபக: தக்ஷிணாமூர்த்தி இவற்றை யெல்லாம் உபதேசிக்கவில்லை; பிரஹ்மம் சக்தியோடு சம்பந்தித்ததா, இல்லையாவென்றும் சூசிப்பிக்கவில்லை; மௌனமா யிருந்தார். அவ்வளவே. சீடர்களின் சம்சயங்கள் யாவும் ஒருங்கே யொழிந்தன; தாத்பர்யமென்ன? படித்தறிவதிலும், வாதப் பிரதிவாதங்களிலும் பயனொன்றுமில்லை. 'நான் இருக்கிறேன்' என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் அந்த 'நானை' உடலோடு சம்பந்தப்படுத்தி 'உடல் நான்' என்று நினைக்கிறோம். ஸ்வரூபத்தினின்று நானென்னும் உணர்வும், அதனின்று புத்தியு முண்டாகின்றன. புத்தியில் பிரதிபிம்பிக்கும் நான் உபாதியாம் உடலுடன் சம்பந்தித்து உடலளவாய்த் தோன்றுகிறது. தனக்கு மூலமாம் அஹம் ஸ்பூர்த்தியை புத்தி எதிரிட்டுக் காணமுடியாது. தேகாத்ம புத்தியை விடுவதே நாம் செய்யவேண்டியது. அதை எப்படிச் செய்வது? நினைப்புகள் எழுவது யாருக்கென்று இடைவிடாது கவனிக்கவேண்டும். அதனால் அகந்தைப் பொய்த் தோற்றம் ஒழிந்துவிடும். ஆத்மாவே, பிரஹ்மமே, நானென விளங்கும்.*

*[வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 169] கே: பயத்தை யொழிப்பதெப்படி?*

*ஸ்ரீபக: பயமென்பதென்ன? ஓர் நினைப்பே அது. ஆத்மாவாம் தனக்கயலாய் ஏதாவதிருந்தாலன்றோ பயப்பட வேண்டும்? உண்மை யிவ்வாறிருக்க, தானோர் தனிதல்போல் அகந்தை யொன்றுதித்து, விஷயங்களைத் தனக்கன்னியமாகக் காண்கிறது. இவ்வகந்தை யெழாவிடத்தே அன்னியம் ஏதுமில்லா ஆத்ம ஸ்வரூபமே*

சுடர்கிறது. அன்னியமாயொன்று தோன்றுவதற்கு, அதைக் காண்பவனொருவன் இருக்க வேண்டும். அவன், அந்த நான், யாரெனக் கண்டு தெளிந்தால், மீண்டும் சந்தேகமோ, பயமோ, அகந்தையைப் பற்றியே யெழும் பிற நினைவுகளோ எழா.

*[வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 116]* கே: மனோநாசத்தில் தீவிரமா யீடுபடல் ஆபத்திற் கொண்டுபோய் விடுமென்றும் சிலர் சொல்கிறார்களே, அதுவென்ன?

ஸ்ரீபக: யாருக்கு ஆபத்துண்டாகும்? ஆபத்தோ சம்பத்தோ ஆத்மாவுக்கன்னியமாய் வேறெதுதான் இருக்கமுடியும்? இடையறாது நான்நான் எனச் சுடரும் அகண்ட போத சாகரத்தின் ஒரு சிறு குமிழியே அகங்கார வடிவனாம் ஜீவன். குமிழியும் நீரே, நீருக்கன்னியமாய் அதற்கோர் இருப்புமில்லை. அது உடையுங்காற் கடலுடன் ஒன்றாகிறது; இருக்குங்காலும் அது கடல்நீர் மயமே. சர்வசாதாரணமான இவ்வுண்மையை யுணராது, கணக்கற்ற பற்பல வழிகளிலும் அவற்றின் சிக்கல்களிலும் கருத்தைச் செலுத்திக் குழப்பமுறுகின்றனர் பெரும் பாலோரும். எத்தனை மதங்கள், சித்தாந்தங்கள், கொள்கைகள்! அப்பப்பா! இவை யாவும் முடிவில் எதற்காக? தனதுண்மையை யுணர்தற்கே.

*[ஸ்ரீமகரிஷி வாய்மொழி- (2004) பக். 13-14]* ஸ்ரீபக: மன வாக்கு கடந்த நிலையே மௌனம்; அது மனத்தின் செயலின்றி நடைபெறும் தியானம். மனத்தை அடக்குவதே தியானம். ஆழ்ந்த தியானமே நிரந்தரப் பேச்சு. வார்த்தைகள் இந்த மௌன பாஷையைத் தடுக்கின்றன. உபந்நியாசங்கள் ஜனங்களுக்கு யாதொரு நலனின்றே மணிக்கணக்காய் நடைபெறலாம். ஆனால் மௌனம் சாசுவதமாயும் மனித வர்க்கம் முழுவதற்கும் பலன் அளிப்பதாயும் இருக்கிறது. ஒருமணி நேரம் பிரசங்கம் கேட்டுவிட்டு, அதனால் தன் வாழ்வை

*மாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் உறுதி உறாத ஒரு மனிதனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? ஒரு பரிசுத்த சந்நிதியில் அமர்ந்து சிறிது நேரத்தில் தனது வாழ்க்கையின் நோக்கம் முழுவதும் மாறப் பெற்றுப் போகும் வேறொருவனோடு அவனை ஒப்பிட்டுப்பார். இவ்விரண்டில் எது நல்லது? பயனின்றி உரக்கப் பிரசங்கம் புரிவதா? அல்லது மௌனமாய் அமர்ந்து ஆத்ம சக்தியை எங்கும் பரப்புவதா?*

*[வசனாம்ருதம்-பாகம் 2 (2000) பக். 9-10] ஒருவர்க்கொருவர் தமது எண்ணங்களைத் தெரிவித்துக் கொள்வதற்குப் பயன்படும் சாதனமே பேச்சு. எண்ணங்கள் எழுந்த பின்னரே பேச்சுக்கு அவகாசம் ஏற்படுகிறது. எண்ணங்கள் அனைத்திற்கும் நானென்னும் எண்ணமே மூலமாதலின் அதுவே பேச்சனைத்தின் மூலமாம். எண்ணம் எதுவுமற்ற நிலையில் யாவர்க்கும் பொதுவான மௌன பாஷையினாலேயே ஒருவரை யொருவர் புரிந்து கொள்கிறோம். பல்லாண்டுகள் சம்பாஷணை வாயிலாக அறியமுடியாதது மௌனத்தால் ஒரே கணத்தில் விளக்கமுறும். சக்திமிக்க மௌனமே சிறந்த உபதேசம். அதுவே தக்ஷிணார்த்தியின் மௌன உபதேசம்.*

*[வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 146] ஸ்ரீபக : நம் ஸ்வரூபம் ஈச்வர ஸ்வரூபம் ஒன்றே. நம்மிடம் ஈச்வர திருஷ்டி (ஈச்வர ஸ்வரூபமே நாமெனக் காண்பது) நமக்கேற்படுவதே ஈச்வரானுக்ரகமென்று சொல்லப்படும்.*

*[அனுதினமும் ஸ்ரீபகவானுடன் (2003) பக். 43] முதலில் ஒருவன் தான் தாழ்ந்தவனாகவும், எல்லாமறிந்த சர்வசக்தி வாய்ந்த ஒரு கடவுள் அவனுடைய, மற்றும் உலகத்தின் விதியை நிர்ணயிப்பவராக இருப்பவராகவும் நினைத்துக்கொண்டு, அவரை வழிபடுகிறான்; அதாவது பக்தி செலுத்துகிறான். அவன் ஒரு கட்டத்தை யடைந்து, ஞானத்திற்கு அருகதையுடையவனாக ஆனதும், அவன் வழிபட்டுக்கொண்டிருந்த அதே கடவுள், குருவாக வந்து*

*அவனை வழிநடத்திச் செல்கிறார். அந்த குரு, 'கடவுள் உன்னுள்ளேயே இருக்கிறார், உள்ளே ஆழ்ந்து உணர்ந்து கொள்' என்றுதான் சொல்வார்.*

*[ரமணரின் பொன்மொழிகள் (2004) பக். 197] ஸ்ரீபக: அது நீ (தத்வம் அஸி) என்று மறைநூல்கள் வலியுறுத்திக் கூறினால், உடனே எது நான்? நான் யார்? என்ற கவனத்துடன் தன்னை நாடவேண்டுமே தவிர அந்தப் பிரம்மம் நான் என்று எண்ணுவது (தியானிப்பது) மன உரமின்மையின் அறிகுறியேயன்றி வேறல்ல. ஏனெனில் நீங்கள் அதுவாகவே என்றென்றும் நிலை கொண்டுள்ளீர்கள்.*

*[ரமணரின் பொன்மொழிகள் (2004) பக். 198] ஸ்ரீபக: அஹம் பிரம்மாஸ்மி (நான் பிரும்மமாய் இருக்கிறேன்) என்பது ஒரு நினைவே. அப்படி நினைப்பது யார்? பிரும்ம சொரூபம் யதார்த்த நானேயாகும். அது நான் பிரும்மம் என்று நினையாது. பின்னர், அவ்வாறு நினைப்பது எது? போலி அகந்தையே. அந்த அகந்தையே நினைப்புகள் அனைத்தின் மூல நினைப்பு. அத்தகைய அகந்தையற்று நிற்றல் வேண்டும். அகந்தை கிளம்பிய பிறகே பயமும் பிறவனவும் தோன்றுகின்றன.*

*[வசனாம்ருதம்-பாகம் 2 (2004) பக். 36] உபாதி ஏதுமற்ற சுத்தாத்ம ஸ்வரூபாகாரமாய் நிற்றலே நிவிருத்தி. தேகம், உலகம் முதலியவற்றுடன் அதை சம்பந்தப் படுத்துவது பிரவிருத்தி. பஹிர்முகமே பிரவிருத்தி; அந்தர்முகமே நிவிருத்தி. பிரவிருத்தியோ நிவிருத்தியோ, வேறெதுவோ, ஆத்மாவுக்கன்னியமாய் ஒன்றுமேயில்லை. அவ்வாத்மாவாம் தன்னை யுணர்தலே எல்லா மதங்களின் உபதேசமாகும்.*

*[வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 194-195] உபாதியற்ற சுத்த சித்தின்று மஹத் தத்துவமும் அதனின்று அகந்தை மனமும் வெளிப்படுகின்றன. மஹத் தத்துவம் ஈச்வரனது உபாதி; அகந்தை மனம் ஜீவனது உபாதி.*

ஆனால், ஜீவன் தனது மனவுபாதியிற் கட்டுப் படுவதுபோல் ஈசன் (மஹத்) உபாதிக்கு உட்பட்ட வனாகான்; அவன் பரப்பிரஹ்ம ஸ்வரூபனாகவே இருக்கிறான். பரம்பொருளினின்று ஈசதத்துவம் அதனின்று ஜீவஜகத் தோற்றம் வெளிப்படுகின்றன. ஈசனுக்கும் ஸ்வரூபமாகத் திகழ்வதே பரம்பொருள்.

(ஸ்ரீபகவானின், உபதேச உந்தியாரின் 24வது பாடலான "இருக்கும் இயற்கையால் ஈச சீவர்கள், ஒரு பொருளேயாவார் உந்தீபற; உபாதி உணர்வே வேறு உந்தீபற" எனும் அருள் கிரந்தம் இக்கருத்தை அழகாக விவரித்து அருள்கிறது.)

[வசனாம்ருதம்-பாகம் 2 (2000) பக். 268-269] கே: சமாதியனுபவம் கூடுவதும் கலைவதுமாயிருக்கக் கூடுமா?

ஸ்ரீபக: நமது இயல்புநிலையே சமாதியென்னுங்கால் அஃதெவ்வாறு தோன்றி மறையக்கூடும்? இயல்பு நிலையை யுணராக்கால் அனுபவம் தடைபட்டிருக்கிறது. அனுபவம் எதனால் தடை பட்டிருக்கிற தென்றாய்ந்து தடையை நீக்கிக் கொண்டால் இயல்புநிலை தட்டுத் தடங்கலின்றி இடையறாதொளிரும். உபாதிகளோடு சம்பந்தப்பட்டு அல்லலுறும் அற்பவகந்தையையே மூலநாட்டத்தால் முற்றிலும் ஒழிக்கவேண்டும். இயல்புநிலை என்றும் ஒன்றே. அதையுணர்ந்தால் மீண்டும் அதனின்று ஒருபோதும் நழுவமாட்டோம்.

கே: பால் பிரண்டன் ஒருமணி நேரம் சமாதியில் இருந்ததாகக் கூறியுள்ளதைப்பற்றியே சந்தேகம் எழுந்தது.

ஸ்ரீபக: முயற்சியால் மனம் குவிவது தாற்காலிகமாகவே யிருக்கும். சமாதி தனதியல்பே யென்றுணருங்கால் ஒரு முயற்சியுமின்றியே என்றும் மனங்குவிந்தே யிருப்போம். அதுவே ஸஹஜசமாதி. ஸஹஜநிலை நன்றோர்க்கு விவகாரம் சமாதி யென்னும் வேற்றுமை சற்றுமிராது.

*எச்சூழ்நிலையிலும் எவ்வளவு சிக்கலான விவகாரத் திடையிலும் அவர்கள் கலக்கம் சிறிதுமின்றி அமைதி மயமாயிருப்பர்; ஏனெனில், தனக்கயலேதும் அவர்களுக்கில்லை.*

*[வசனாம்ருதம்-பாகம் 2 (2000) பக். 129-130] ஸத்யம், வியாவஹாரிகம், பிராதிபாஸிகம், பாரமார்த்திக மென்று வகைபடுத்திக் கூறப்படும். வியாவஹாரிக திருஷ்டியில் ஜீவேசுவர ஜகத்துக்கள் ஒப்பப்படுகின்றன. ஜீவன் ஈசனை ஆராதித்து பந்தம் நீங்கி அமிருதனாகிறான். ஜீவேச்வரஜகத் தோற்றம் ஈச்வர சக்தியேயாம் மாயையால் நிகழ்வது. அத்தோற்றத்தால் அத்வைதத்திற்கு ஓர் ஹானியும் இல்லை. ஜீவேச்வரஜகத் தோற்றம் காண்பவனது காட்சியேயாம்; அவனை விட்டு அவற்றிற்கோர் இருப்பேயில்லை; நினைவின் நாநா ஜீவத்தோற்றம் கனவிற் காணும் அத்தோற்றத்தைப் போன்றதேயென்பது பிராதிபாஸிக வாதம். அத்வைதப் பிரஹ்மஸ்வரூபத்தைத் தவிர வேறெதுவுமேயில்லை; சிருஷ்டியுமில்லை ஸம்ஹாரமு மில்லை: பந்தமில்லை, மோக்ஷ மில்லை; பக்தனுமில்லை, முமுக்ஷுவுமில்லை, முக்தனுமில்லை யென்பது பாரமார்த்திக ஸத்யமொன்றையே ஒப்பும் அஜாதஸித்தாந்தமென நவிலப்பெறும்.*

*[வசனாம்ருதம்-பாகம் 2 (2000) பக். 130] கே: மாயையால் ஜீவஜகத் தோற்றம் ஏற்படுவதேன்?*

*ஸ்ரீபக: ஏனெனில் கேட்பவன் மாயையின் விளைவான ஓர் வியக்தி. தன் மூலத்தைப்பற்றி அவனெவ்வாறறிய முடியும்? ஆனால், ஏனென்று கேளாது, கேட்பவன் யாரென்றாழ்ந்து கவனித்தால், கேட்பவனே எஞ்ச மாட்டான். அதுதான் கேள்விகளனைத்திற்கும் ஒரே விடை. மனோ மயமாம் வினாவிடைகளுக்கிடமே யின்றிய மனதற்ற ஸத்யாத்ம ஸ்வரூபமொன்றே மிகுந்திருக்கும்.*

*[வசனாம்ருதம்-பாகம் 1 (2004) பக். 36] ஸ்ரீபக: வெளி விஷயங்களெல்லாம் நிலையற்று நசிப்பதை யுணர்ந்தால் அதனால் விஷயவிரக்தி யுண்டாகும். ஆகவே, விசாரணையே முக்கியமிக்க முதற்படி. அவ்விசாரணையால் உலக வின்பங்கள், செல்வம், பெயர், புகழ் முதலியவற்றில் துச்ச புத்தி யுண்டாம். இவ்விதம் விரக்தியுற்ற புத்திக்கு நானாரென்னும் விசாரணை வழி தெளிவாய் விளங்கும். அஹம் விருத்தியின் உற்பத்தி ஸ்தானம் இதயமே. அதுவே அடைதற்குரிய இடம்.*

*[நான் யார்? (2008) பக். 11] ஸ்ரீபக: சுகமென்பது ஆன்மாவின் சொரூபமே. பிரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுகம் என்பது கிடையாது. மனம் வெளிவரும்போது துக்கத்தை அனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும் போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே அனுபவிக்கிறது. அப்படியே தூக்கம், சமாதி, மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிறபோதும், வெறுத்த பொருளுக்குக் கேடு உண்டாகும்போதும் மனம் அந்தர்முகமாக ஆத்ம சுகத்தையே அனுபவிக்கிறது. ஜகம் மறையும்போது, அதாவது நினைவற்றபோது மனம் ஆனந்தத்தை அனுபவிக்கிறது; ஜகம் தோன்றும்போது அது துக்கத்தை அனுபவிக்கின்றது.*

*[வசனாம்ருதம்-பாகம் 2 (2000) பக். 296] ஸ்ரீபக: இன்ப துன்பங்கள் யாருக்கென்று விசாரித்தால், நான் துக்கப்படுகிறேன் என்று கருதும் அகந்தையே ஒரு நிழல் மாத்திரமே என்று உணர்வோம். அது தோன்றி மறைந்து கொண்டிருக்கிறது. தோன்றாது மறையாது அதன் அடிப்படையாக என்றும் ஓரியல்பாகத் துலங்கும் கேவல சித் ஸ்வரூபமே நாம் என்று உணர்வோம். அவ் அமைதி மயமே தாம். இதுவே மெய்ஞ்ஞானம், துன்பத் தொடர்பேதுமற்ற நித்யானந்த நிலை.*

தொடரும்

# ஒன்றாகக் காண்பதே காட்சி

## சு. பரமேஸ்வரன்

திருநாவுக்கரசர் சிறிது காலம் சமண சமயத்தைச் சார்ந்து இருந்தார். ஒரு மடாதிபதியாக இருந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்றார். பின்னர் சைவ சமயத்தைச் சார்ந்தபின் அவ்வடிகள் மனதாலே சதா சிவத்தியானம் செய்தும் திருக்கோயில் உழவாரப் பணி செய்தும் வந்தார். அவரது சமூகப் பணி, மக்களிடம் காட்டிய அன்பைப் பாராட்டி இறைவன் அவருக்கு மக்கள் பசிப்பிணியைப் போக்கத் திருவீழிமிழலையில் தங்கப் படிக்காசு வழங்கினார்.

அப்பரடிகள் தமிழகத்திலுள்ள சிவப்பதிகளை எல்லாம் கண்டு வணங்கிய பின்பு, கைலாய மலையானைத் தரிசிக்கப் பேராவல் கொண்டார். அவர் மிக முதிர்ந்த வயதில்தான் சமணத்தை விட்டுச் சைவரானார். முதுமைப் பருவத்தில் வடதிசை நோக்கி நடந்தார். காசி விசுவநாதரையும், புனித கங்கையையும் கைதொழுதார்.

கயிலையை நோக்கி நடந்து, நடந்து கால்கள் தேய்ந்தன. அவரது துயரம் கண்டு அன்பர்கள் முயற்சியைக் கைவிடுமாறு வேண்டினர். ஆனால் அவரோ,

**ஆளும் நாயகன் கயிலையில்**
**இருக்கை கண்டால் அல்லால்**
**மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்.**

எனச் சிறிதும் மனம் தளராமல் பயணத்தைத் தொடர்ந்தார்.

வானத்தில் ஓர் அசரீரி ஒலித்தது. “அப்பரே! திருவையாற்றில் உமக்குக் கயிலாயக் காட்சியை அளிப்போம்! என்ற இன்சொல் கேட்டு மகிழ்ந்தார். திருவையாற்றுக் குளத்தில் மூழ்கி எழுந்தார். அப்பர் அங்குக் கண்ட காட்சி யாது?

*காதல் மடப்பிடியோடும் களிறு வருவெனக் கண்டேன்!*
*கண்டேன் அவர் திருப்பாதங் கண்டு அறியாதன கண்டேன்!*

விலங்குகள் மற்றும் உலகப் பொருட்கள் அனைத்தையும் சிவசக்தி வடிவமாகக் கண்டார். சகல உயிர்களையும், இறையுருவாகக் காண்பது ஆன்மிகம். ஆனால் உலகம் மேல்போக்கான காட்சிகளில் மயங்கிக் கட்டுண்டு இடர்ப்படுகிறது. அன்றே தமிழ்ப் பாட்டியும் “ஒன்றாகக் காண்பதே காட்சி?” என்றார். இங்கே நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சமயம் என்பது வேறு, ஆன்மிகம் என்பது வேறு. சமயம் மக்களைப் பிரிக்கும். அது மனதால் உண்டாக்கப்பட்டது. மனம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் பிரிவினை, வேற்றுமை உண்டு. ஆன்மிகம் என்பது மனதால் தோற்றுவிக்கப்படாதது. எல்லா வேற்றுமைகளையும் கடந்தது. அதீதமான உன்னத நிலை. ஆன்ம திருஷ்டியில் ஒருமை மட்டுமே உண்டு. அன்பு என்பது அறிந்தவர்களிடம் காட்டுவது; அருள் என்பது அனைவரிடமும், எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவது. அன்பு இன்றி அறமில்லை. அறமும் அருளும் ஒன்றே.

குரங்கு அணில் மூட்டம்:

காஞ்சி மாநகருக்கு அருகில் குரங்கு அணில் மூட்டம் என்ற சிவத்தலம் இருக்கிறது. இக்கோயிலில் குரங்கு, அணில், காக்கை இறைவனை வழிபட்ட புடைப்புச் சிற்பங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஞானசம்பந்தரால் பாடப் பெற்ற தலம். வாலி, இந்திரன், எமன் ஆகியோர் குரங்கு, அணில், காக்கை உருவில்

இறைவனைப் பூசித்து பேறு பெற்றதால் இத்தலம் குரங்கு அணில் மூட்டம் எனப்பட்டது. இறைவன் எல்லா உயிர்களுக்கும் அம்மை, அப்பராய் இருக்கிறார். கருடன், சிலந்தி, யானை, பசு, எறும்பு எனப் பிற அஃறிணை உயிர்களும் ஏதோ ஒரு வகையில் அன்பு காட்டி முக்தி பெற்றதாக நமது புராணங்கள் கூறும்.

'காக்கை, குருவி எங்கள் ஜாதி!' என்று பாப்பா பாடலைப் பாடிய பாரதியார், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் வேண்டும் என்று மனித நேயத்தை வலியுறுத்துவார். அவருக்கு முன்னோடியான வள்ளலாரும் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்!' என்று பாடினார்.

இன்றைய நவீன உலகில், பகுத்தறிவு கொண்டு பார்க்கையில் இவற்றையெல்லாம் நம்புவது சிரமமான காரியம். இவை எல்லாம் அனுபவ சாத்தியமில்லை என்றே எண்ணத் தோன்றும். ஆனால் நம்முடைய காலத்தில், அப்படி சுவாமிகள் கண்ட அற்புதக் காட்சியின் ஆழத்தை, உள்ளபடியே உணர்ந்து வாழ்ந்து காட்டியவர் பகவான் ரமணர். எல்லோரும் ஓர் இனம்! எல்லாம் இறைவனின் பிரதி பிம்பம்! எனக் கண்டவர். எல்லாமாகி, எங்குமாகி இருக்கிற இறைநிலையில் 54 ஆண்டுகள் திருவண்ணாமலையில் தூல உடல் கொண்டு வாழ்ந்தது யாவரும் அறிந்ததே. உருவ வழிபாடு என்றால் நமக்குக் கோயில்களில் உள்ள தெய்வச் சிலைகளை வழிபடுவது மட்டுமே தெரியும். ஆனால் ஞானிக்கு உருவத்தோடு உள்ள எல்லா உயிர்களையும் தன் உயிராக அன்பு பூண்டு ஒழுகுவதாகும்.

சாஸ்திரங்களையும், பெரிய புராணத்தையும் தம் வாழ்நாள் முழுவதும் ஆய்ந்தவர்கள் உண்டு. ஆனால் நாயன்மார்கள் போல் கோடிக்கு ஒருவர்கூட வரவில்லையே? ஏன்? இன்றைய விஞ்ஞான உலகின் குறை என்ன? அறிவில் குறைவா? அணுவைப் பிளந்து,

அதன் வயிற்றில் உள்ள குடல், குண்டாமணியை (எலக்ட்ரான், புரோட்டான்) ஆராயும் அறிவிற்கு என்ன குறை? எத்துணையோ விஞ்ஞான அற்புதங்களை நிகழ்த்தும் செயல் திறனில் குறை ஏது?

வெறும், ஏட்டுப் படிப்பும், ஆராய்ச்சியும், மனதை ஒடுங்கச் செய்யாது. இதோ தாயுமானவரின் பாடலைக் கேளுங்கள்.

'கற்கும் நிலை கற்றால் கருவி அவிழாது.
அருளாய் நிலை கற்பதுவே நீதம் பராபரமே'

கடவுளே, மக்களாகவும், பிற உயிர்களாகவும் காட்சி தருகின்ற இன்பத்தில் திளைத்தவர்களின் அறிவே பேரறிவாகும். உண்மை பக்தனுக்கு வாழ்க்கையில் இலட்சியம் ஏதும் கிடையாது. தன்னை பக்தியில் கரைத்துக் கொள்வதே இலட்சியம். குழந்தை போன்ற உள்ளம் உடையவரே பக்தியில் கரைந்து போக முடியும். இல்லையெனில் பக்தியின் பெயரால் நமது மனமே நமக்குள் பல ஏமாற்று வேலைகள் செய்யும். சுந்தரர் பாடல் பெற்ற திருச்சுழியில் பிறந்த ரமணருக்கு பெரியபுராணம் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் எந்தவித சமய அனுஷ்டானமோ, சாதனையோ செய்யவில்லை. மதுரை மாநகரில் அவர் வாழ்ந்த பொழுது, மார்க்கண்டேயர் வயதில் மரண அனுபவம் ஏற்பட்டு, அனுபூதி நிலையை அடைந்தார். அவர் கருவிலே திருவானவர். எனவே அவருக்கு அனுபூதி நிலையானது. இறைவனின் அருட்கொடையாக, தேடாது உற்ற நல்ல திருவருள் நிதியாக கிடைக்கப் பெற்றது. திருவருணையில் அண்ணா மலையாரின் தெய்வக் குழந்தையாக 54 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். ஒருநாள்கூட வெளியில் எந்த ஊருக்கும் செல்லவில்லை. ஜாதி அபிமானம் கூடாது, என்ற கொள்கையில் பால ரமணர் தமது முப்புரி நூலை அறுத்து, ஐயன் குளத்தில் வீசி எறிந்தார். ஒற்றைக் கோவணத்துடன் தவக்கோலம் பூண்டார். ஞானசம்பந்தரின் ஞான வாழ்வு 16

*வயதில் நிறைவுற்றது. ரமணரின் ஞான வாழ்வு 16 வயதில் தொடங்கி 54 ஆண்டுகள் வரை நீடித்தது.*

*பகவான் ரமணர் திருவண்ணாமலையை அடைந்த காலம் முதலே, அவருக்கு விலங்குகள், பறவைகள் என பிராணி வர்க்கத்திலும் பக்தர்கள் இருந்து வந்தனர். சில வருடங்கள் அவர் குகைகளிலும், மலையைச் சார்ந்துள்ள மறைவிடங்களிலும், சமாதி நிலையில் இருந்து வந்தார். அப்போது அவரைச் சூழ்ந்திருந்த பக்தர்கள், குரங்குகள், அணில், மயில், மான், பாம்புகள் முதலியவையே. இக்காட்டு விலங்குகள் ரமணரைக் கண்டு அஞ்சியதும் இல்லை. தீங்கிழைத்ததும் இல்லை. நமது புராணங்களில் கூறியபடி முன்வினைப் பயனைத் தீர்க்க எவரெவர், எக்கோலத்தில் வருவார்கள் என்பது நமது சிற்றறிவுக்கு எட்டாது.*

*ரமணர் மனிதர்களைப் போலவே சகல ஜீவராசிகளையும் பாவித்தார். அஃறிணை உயிர்களையும் அன்புடனும், மரியாதையுடனும் அழைப்பார். பசங்களுக்குச் சாப்பாடு கொடுத்தாச்சா? அவனை அதட்டாதீர்கள்! என்றெல்லாம் அவர் கூறுவதைக் கேட்டு, ஏதோ சிறுவர், சிறுமியர்களை குறிப்பதாகப் பலரும் எண்ணி ஏமாறுவது உண்டு. பெற்ற தாய், தந்தையரை நாய் என்றும் பேய் என்றும் வசைபாடும் பிள்ளைகளை இன்று நாம் காண்கிறோம். எல்லோரிடமும், இனிமையாகவும், உணர்வுபூர்வமாகவும் பேசுவது ஞானிகள் மட்டுமே. மற்றவர்களின் இனிய வார்த்தைகளில் எப்போதும் ஒரு நோக்கம் இருக்கும். காரியம் ஆனதும், போடா போக்கத்தவனே! என்பார்கள்.*

*எவ்வுயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்*
*தெய்வ அருள் கருணை செய்வாய் பராபரமே.*

*ரமணர் மலைமீது இருந்த சமயம் குரங்குகள் பல அவரிடம் நட்பு பாராட்டியதைச் சுவைபடக் கூறுவார்.*

காட்டிலுள்ள குரங்குகளிலொன்று ஏனைய குரங்குகளால் கடிபட்டு, குற்றுயிராய் விருபாட்ச குகை அருகில் கிடந்தது. குற்றுயிராய்க் கிடந்த குரங்கைக் கண்டு இரக்கப்பட்டு, ரமணர் அதற்குப் பலநாட்கள் சிகிச்சை செய்து குணப்படுத்தினார். மனிதர்களிடம் வளர்க்கப்பட்ட குரங்குகளை வனக் குரங்குகள் தம்முடன் சேர்த்துக் கொள்ளாது. ஆயினும் சில நாட்களுக்குப் பின்பு மற்ற குரங்குகள் இந்த நொண்டிக் குரங்கை தம்முடன் ஏற்றுக் கொண்டன. அது தலைவனும் ஆகிவிட்டது. ஞானியின் அரவணைப்பில் இருந்ததல்லவா? குரங்குகளிடம் ரமணருக்கு மிகுந்த பாசம் உண்டு. அவர்களுடைய நடத்தை, பழக்க வழக்கம், சண்டை யாவும் ரமணருக்கு அத்துபடி. ஒரு பெண் குரங்கு ஒவ்வொரு முறையும் தான் பெற்ற குட்டியை ரமணரிடம் கொண்டு வந்து காட்டுமாம். சில வருடங்களுக்குப் பின்பு நொண்டிக் குரங்கு நோய்வாய்ப்பட்டு ரமணரின் மடியில் இறந்தபோது அதனைப் பாலால் குளிப்பாட்டி, விபூதி, குங்குமம் இட்டு சமாதி வைத்து, ஒரு கல்லையும் நாட்டினார். வானரங்களையும் தன் சீடர்களைப் போலவே நடத்தினார்.

### முட்டத்தின் தவம்:

காக்கைகளும், அணில்களும் தமது குஞ்சுகளுடன் ரமணரின் மீது அமர்ந்து, அவர் கையால் உணவு ஊட்டப்பெறும். ஒரு சமயம் உருவத்தில் சற்று பெரிய காகம் ஒன்று ரமணர் அமர்ந்திருக்கும் அறைக்கருகில் உள்ள மரத்தின்மீது வெகுநேரம் அமர்ந்திருந்தது. பின்பு அது மீண்டும் பல தினங்கள் தொடர்ந்து வருவதும், போவதுமாய் இருந்தது. அதற்கு யார் ஆகாரம் போட்டாலும் அதை ஏறெடுத்தும் பாராது. மரத்தின்மீது தலையைச் சற்று தாழ்த்திக் கொண்டு வெகு நேரம் இருக்குமாம். அது ஏதோ தவம் செய்வது போலும்,

ரமணரின் தரிசனத்திற்காகவே வருவதுபோல இருந்தது. அந்த நாளும் வந்தது. ரமண பகவான் தன் அறையிலிருந்து வெளியில் வரும் சமயம், அந்தக் காகம் மரத்திலிருந்து 'தொப்' எனக் கீழே விழுந்தது. இதைக் கண்ணுற்ற கருணாமூர்த்தி மிகுந்த பாசத்துடன் அதைக் கையில் எடுத்து, நீர் கொடுத்து அன்புடன் வருடிக் கொண்டு இருக்க, அமைதியாக அதன் உயிர் அடங்கியது. ரமணரின் கையால் ஆச்ரமத்தில் அதற்கு முறைப்படி சமாதி வைக்கப்பட்டது. இதேபோல் வள்ளி என்ற மானும் ரமணரின் அன்பிற்குப் பாத்திரமாகி, அவரால் சமாதி வைக்கப்பட்டது.

*பசுலட்சுமி:*

ரமணர் ஆச்ரமத்தில் இருந்த பல ஜீவ வர்க்கங்களில் லட்சுமி எனும் பசு, ரமண பக்தர் ஒருவரால் அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டதாகும். பசு லட்சுமி அறிவிலும், பக்தியிலும் மிகவும் சிறந்ததாக விளங்கியது. ரமண சந்நிதியில் எவ்வளவு கூட்டம் இருப்பினும், அதையெல்லாம் கடந்து ரமணரின் காலடியில் படுத்துக் கொள்ளும். இது ஏனைய பக்தர்கள் யாருக்கும் கிட்டாத பேறு. பசு லட்சுமி ரமணரின் ஜயந்தி நாளான மார்கழி புனர்வசு நாளில் தொடர்ந்து சில கன்றுகளை ஈன்றது ஒரு வியப்பான செய்தியாகும். ரமணர் மலைமீது இருந்த சமயம் தினமும் அவருக்கு உணவு கொடுத்து அன்பு பாராட்டிய கீரைப்பாட்டி என்ற ஒரு மூதாட்டியே பசுவாகப் பிறந்து வந்துள்ளது என பலரும் நம்பினர். அறிவு படைத்த பசு 1948ல் சரீரத்தைத் துறந்தபோது ரமண பகவான் பசுவின் சிரசைத் தடவிக் கொடுத்து, அதன் இதயத்தில் அருளைச் செலுத்தி முக்தி அளித்தார். பசு லட்சுமிக்கு முறைப்படி சமாதி வைக்கப்பட்டு, பசுவின் உருவச்சிலை நிறுவப்பட்டது. பசு லட்சுமி விமுக்தி அடைந்த நாள் என்று ரமணரால் ஒரு வெண்பா எழுதி சமாதிமீது வைக்கப்பட்டது.

*ரமணரின் வெண்பாவைப் படித்த அன்பர் ஒருவர் பிராணிகளுக்கு முக்தி கிடையாது. மனிதனாகப் பிறந்து, வாழ்ந்த பின்புதான் விடுதலை பெற முடியும்! எனச் சில புத்தகங்களில் படித்திருக்கிறேன். இது சரியா? என வினவினார். நீங்கள் கஜேந்திரன் மோட்சம் என்றும், ஜடாயூ மோட்சம் என்றும் புராணங்களில் உள்ளதைக் கேள்விப்பட்டதில்லையா? விமுக்தி என்றால் மோட்சம் அடைந்து விட்டது என்றுதான் பொருள். பிராணிகளுக்கு என்ன, ஒரு முள் செடிக்குக்கூட ஒருவர் மோட்சம் கொடுத்திருக்கிறார் என்றார். பின்பு, உமாபதி சிவம் என்ற சிவாச்சாரியார், தாழ்ந்த குடியில் பிறந்த பெற்றான் சாம்பான் என்பவனுக்கும், முட்செடி ஒன்றுக்கும் முக்தி கொடுத்த கதையை எடுத்துக் கூறினார். முக்தி பெற ஒரு ஜீவன், மனிதனாகத்தான் பிறக்க வேண்டும் என்பது இல்லை. மிருகப் பிறவியிலும் முக்தி பெறலாம் என திருவாய் மலர்ந்தார்.*

*இவர்களெல்லாம் மிருகங்கள், பறவைகள் என இப்போது உள்ள உடலைக் கொண்டுதானே கூறுகிறீர்கள். முன்பு இவர்கள் எப்படி, எங்கு இருந்தார்கள் என்று தெரியுமா? என்று கேட்டார். ஆம் உண்மைதான். நாம் அவைகளின் உடலையே காண்கிறோம். ஆனால் ரமணரோ தன்னையறிந்த ஆன்ம ஞானியாதலால் எல்லாவற்றையும் தன் ஆன்ம சொரூபமாகவே காண்பார். ஒரு ஞானியின் கருணையைப் பெற முன்பு எவ்வளவு பக்தி பூண்டு, இப்பிறவியில் பசுவாகவும், குரங்காகவும், மான், அணில், காகம் முதலிய உடல் கொண்டு எவர், எவர் வந்தனரோ? யார் அறிவார்?*

***"எங்கே யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு இங்கே இன்று***

***அருள் புரியும் எம் பெருமான்."***

***- சம்பந்தர்***

முன் ஜென்ம தொடர்பின்றி, யாரும் ஒரு ஞானியை அணுக முடியாது. யோக சாத்திரங்களில் பிராணிகளின் உணர்வுகள், மொழிகளை அறியும் சாதனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஒலி, மொழி, குறி யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு உடையது. அதன் கூறுகளைச் சம்யம்மா முறையில் அறிந்து கொள்ள முடியும் என்று பதஞ்சலி யோக சாஸ்திரம் கூறுகிறது.

ஆனால் பகவான் ரமணருக்கு இவை எதுவும் தேவைப்படவில்லை. இதைவிட மேலான அறிவுறும் தன்னை உணர்ந்து, சகல ஜீவ வர்க்கங்களையும் தன் ஆன்ம சொரூபமாகவே கண்டு, உறவு கலந்து ஒன்றியவர் ஆவர். இந்நிலையில் அனைத்து உயிர்களிடத்தும், அன்பு பூண்டு ஒழுகுவது என்பது இயல்பாகவே அமைந்து விடும். இதைத்தான் ரமண பகவானது 54 ஆண்டு அருள் வாழ்வு நமக்கு தெளிவாக அறிவுறுத்துகிறது. அவரது அருள் விலாசமானது, காலம், இடம் கடந்து இன்றும் மெய்யன்பர்களை ஈர்த்து வருகின்றது. திருவண்ணாமலை செல்லும் அன்பர்கள் ரமணரால் சமாதி வைக்கப்பட்டுள்ள ஜீவனுள்ள குரங்கு அணில் முட்டத்தை, ரமணாஸ்ரமத்தில் கண்டு களிக்கலாம். பசுவிற்கும், காக்கைக்கும், மானிற்கும், நாய்க்கும் மோட்சமளித்துத் தன் திருக்கரங்களால், சமாதி வைத்த ஞான புருஷர் யாராவது உண்டா? ஒரு ஞானியர் மிருகங்களுக்கும் முக்தியைத் தர இயலும் என்பதை பகவான் ரமணர் நிரூபித்துள்ளார் என்று ஓஷோ ரஜனீஸ் தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனித மனம் எந்த மகானைக் குறித்தும் சந்தேகப்படக் கூடியது. மனித மனத்தைப் புனிதமானது என்று ஒரே ஒரு சொல்லாலேயே மாற்றும் மகேசன் பகவான் ஸ்ரீரமணர்தான். பக்தியின் உன்னத நிலை என்பது கண்டனவெல்லாம் இறைவன் திருவடியே! என்று உணர்ந்து வாழ்வதாகும். ஞானி சகல உயிர்களையும் தன்

ஆன்மஸ்வரூபமாகவே காண்கிறார். பக்தியும் ஞானமும் ஒரு நாணயத்தின் இருபக்கம் போன்றது. பக்தி, ஞானம், வைராக்கியம் முதலியவற்றை இந்தத் தமிழ் மண்ணில் ஊன்றிப் பரவச் செய்த இவர்களது வரலாற்றுப் பனுவல்கள் அனைவராலும் போற்றிப் படிக்கத் தக்கது. இருள் மண்டிய இதயங்களில் ஞான ஒளி ஏற்றி வைக்க அந்த ஞான வள்ளல்களது பொன்னார் திருவடிகளைச் சிரமேற்கொண்டு பாடி ஆடி மகிழ்வோம்.

*வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி*
*பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி*
*மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி*
*வானத்தார் போற்றும் மருந்தே போற்றி*
*ஊராகி நின்ற உலகே போற்றி*
*சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி*
*பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி*
*இமையது உயிராய் இருந்தாய் போற்றி*
*மூவாய் பிறவாய் இறவாய் போற்றி*
*நெடிய விசும்பொடு கண்ணே போற்றி*
*கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி! போற்றி*
*உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி!!*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2014

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 15 | புதன் | காலை 9.00 | 16 | வியாழன் | இரவு 11.00 |
| பிப்ரவரி | 14 | வெள்ளி | அதிகாலை 4.30 | 15 | சனி | அதிகாலை 6.30 |
| மார்ச் | 15 | சனி | இரவு 10.30 | 15 | ஞாயிறு | இரவு 11.40 |
| ஏப்ரல் | 14 | திங்கள் | நண்பகல் 1.45 | 15 | செவ்வாய் | நண்பகல் 2.00 |

# திருரமணக் குறள்

## தாயுமானவன்

61 ஆனந்தமே நீதான் அடைவது அன்றுஅது
நான்' அந்த ஆழ்துயிலில் இல்.

62 தனிமை என்றில்லை மனிதன் என்றும்
தனித்தே இருப்பான் தெரி.

63 இருட்டில் இருப்பினும் இல்லைஎன் போமோ?
ஒருவன் இருப்பது உணர்.

64 ஆருக்கு அம்முழுமை இல்லை எனக்காண்
இருக்கும் ஓர் அகந்தை ஓர்.

65 'வேலைநான் செய்பவன்' என, வேண்டாம்அவ்
எண்ணம்;அவ்
வேலையார் செய்பவனார் ஓர்.

66 சித்சடத்தை பேய்அகந்தை சேர்த்து முடிச்சிட
இத்தேகம் மாஉலகு ஏழும்.

67 அகந்தை இறக்க அமைதி ஆனந்தம்
சகலம் பிறக்கச் சுகம்.

68 உண்முகம் ஆகமனம் ஐயம்எழாது காண்
கண்வழி போகாமல் கா.

69 தீண்டுமோ ஈக்கள்தாம் தீயதனை மாசுமனம்
அண்டாது ஞானத்தீ யாண்டும்

70 எஜமானனை நாய்தான் எவ்வாறு தேடும்
நிஜமதை அவ்வாறே நாடு.

71 மோப்பம் பிடித்துநாய் வேறுவேஷம் ஆயினும்
தப்பாது தாவிவரும் பார்.

72 பிறப்பைத் தொடர்ந்து இறப்புண்டு ஆன்மா
பிறப்புஇறப்பு இல்லாப் பொருள்.

73 தானுண்டு என்றும்என தானுணர தேகம்ஏன்?
வான்புகினும் ஆனந்த மே.

74 முற்பிறவி பற்றி மாமறதி ஈசனவன்
நற்கதியாய் ஈந்தான் நனி.

75 அடுத்த பிறவி அகந்தையால் தானே
ஒடுக்க முயல்வீர் உணர்ந்து.

76 சாவு செவியுற செப்புவார் மெய்ஞானி
“சாவு உற்றவர்க்குசந் தோஷம்!”

77 இறந்தவர்க்கு துக்கம்ஏது ஆழ்தயிலில் நித்தம்
இறந்து பிறப்பதிலை யோ?

78 உருபெயருக்கு அப்பால் ஒன்றுண்டு உணர்வாய்
கருஅழியாது என்றும் இருக்கும்.

79 எல்லோரும் மாறிட எண்ணுவதென் தன்னுணர்வில்
நில்என்பார் தான்திருந்தல் நன்று.

80 கல்லிலும் முள்ளிலும் கடக்க உலகுமேல்
தோல்போர்த்தார்; காலணி அணி.

தொடரும்

# உண்டு ஒரு பொருள்
# அறிவு ஒளி உளமே நீ

## வி.நிரஞ்சன்

பகவான் ரமணர் நமக்குச் செய்திருக்கின்ற பேருதவி நமது கவனத்தை நம் மீதே திருப்பியதுதான். நமக்கு அன்னியமாய்த் தோன்றுகின்ற அனைத்துப் பொருள்களின் மீதும் நமது கவனம் செல்லுகின்றது என்பதே நமது அனுபவம். விழித்துக் கொண்டு இருக்கையில் தூல உடலை நான் எனக் கொண்டு தூல மயமான உலகை அறிகின்றோம். கனவில் சூக்கும வடிவில் நான் என இருந்துகொண்டு சூக்குமமயமாகிய உலகு ஒன்றை அறிகின்றோம். உறக்கத்தில் தூல சூக்கும உடலையோ உலகத்தையோ அறியாது அதிசூக்கும நான் என இருக்கின்றோம். எதையும் அறியவில்லை என்கின்ற அறிவையும் அதோடு கூடி துன்பக் கலப்பு அற்ற ஒருவித சுகத்தையும் நாம் அனுபவிக்கிறோம். விழித்துக் கொண்ட பிறகு உறக்கத்தில் அனுபவித்த அறியாமையையும் சுகத்தையும் நினைவு படுத்திக் கொண்டு அதை அறிகின்றோம். ஆக அறிபவன் என்று நம்மை வைத்துக் கொண்டு நமக்கு அன்னியமாய்த் தோன்றும் பொருள்களையோ மன நிலைகளையோ தூல சூக்கும அதிசூக்கும உடல்கள் மூலமாக நாம் அறிகின்றோம். அறிபடும் பொருள்களை அறிகின்ற நாம், இவற்றை அறியும் நான் யார் என்பதனை அறிந்து கொள்ள முயலுவதே இல்லை. எப்பொழுதும் நமது கவனம் அன்னியத்தை நோக்கியே திருப்பப்படுகின்றது.

மூன்று உடல்களின் மூலமாக மூன்று வித நிலைகளை நாம் அனுபவிக்கின்றோம். நனவு கனவு துயில் ஆகிய

மூன்று நிலைகளும் தோன்றி மறைகின்றன; தூல சூக்கும அதிசூக்கும உடல்களும் அவ்வாறே அந்த அந்த நிலைகளோடு கூடி எழுந்து மறைகின்றன. தோன்றி மறைகின்ற காரணத்தினால் இம் மூன்று உடல்களும் நிலைகளும் நித்தியமும் சத்தியமும் இல்லை, தோன்றி மறைகின்ற அநித்திய அசத்திய இந் நிலைகளுக்கும் உடல்களுக்கும் ஆதாரமாய் விளங்கிக் கொண்டு இருக்கின்றது நான் என்னும் சொற் பொருளுக்கு உண்மைப் பொருளாகிய உணர்வு.

பகவான் கொள்கைகளையோ தத்துவங்களையோ போதிப்பது இல்லை. உள்ள பொருளோ ஒரே ஒன்று; அது நான் என்னும் பூரண உணர்வு; வெளிவராத நிலையில் அது இருப்புஅறிவுஆனந்தம். வெளிவரும் பொழுது அது ஜகம் ஜீவன் ஈசுவரன் என்னும் மூன்றாய்த் தோன்றுகின்றது. ஜக ஜீவ ஈசுவரர்களுக்கு ஆதாரம் பூரண இருப்பு அறிவு, உண்டு ஒரு பொருள் அறிவு ஒளி உளமே நீ என்பது பகவான் வாக்கு. இப் பாடல் யாரை நோக்கிப் பகவானால் பாடப்படுகின்றது? ஆன்மப் பொருளாக ஐக்கியப் படுத்தப்பட்டு பகவானால் போற்றப்படுகின்ற அருணாசலத்தை நோக்கியே பகவானால் பாடப்படுகின்றது.

சூத்திரம் போன்று இருக்கின்ற இம் மகா வாக்கியத்தில் ஜக ஜீவ ஈசுவரர்களின் தோற்றத்திற்கான ஆதார சத்தியமே உறுதிபடுத்தப்படுகின்றது. இந்த ஒரு மகா வாக்கியத்தின் உட்பொருளை மனதின் இடைவிடாத கவனத்தோடு பற்றி நின்றாலே போதும். மனதால் பற்றப் படுகின்ற இவ் உட்கருத்து மனதையும் கடந்த சொரூபத்தில் நம்மை ஆழ்த்திவிடும் வல்லமை உள்ளது. இதுதான் ஞானிகளின் வாக்கில் உள்ள அதி உன்னத சக்தி.

இறைவனை யார் என்று தெரிந்துகொள்ளாமல் இறைவன் மீது பக்தி கொள்ள முடியாது. இறைவன் மீது பக்தி கொள்ளாமல் இறைவனின் சொருபத்தைத்

தெரிந்துகொள்ள முடியாது என்று ரமண உச்சிஷ்டம் என்னும் ஆதிகாலத்து நூல் ஒன்றிலேயே பகவான் உறுதிபடத் தெரிவித்து இருக்கின்றார். இவ் வாக்கும் ஓர் அரிய மகா வாக்கியம் தான். பகவான் வாய் மலர்ந்து கூறிய சொற்கள் அனைத்துமே மனத்தால் போற்றி கவனத்தால் பற்றி உள் முகமாய் நிட்டை உறுவதற்குக் கிட்டி உள்ள உளவுகளே.

உண்டு ஒரு பொருள் அறிவு ஒளி உளமே நீ என்கின்ற சூத்திரத்தில் பரமார்த்த உண்மையினையே மிகச் சுருக்கமாக பகவான் நமக்கு அளித்து இருக்கின்றார். நாம் அனைவரும் நம் இருப்பை உணர்கின்றோம். அதோடு கூடி எண்ணிறந்த உயிர் இனங்கள் இவ்வுலகில் இருப்பதை அறிகின்றோம். அதற்கும் மேலாக இவ் வுலகத்தில் இருந்து கொண்டு எல்லை அற்றுப் பரந்து விரிந்து கொண்டு இருக்கும் வான் வெளியையும் அதில் தோன்றுகின்ற கணக்கில் அடங்காத கோள்களையும் பார்த்து அறிகின்றோம். அதற்கும் அப்பால் நமது கண்களுக்குப் புலப்படாது எவ்வளவோ கோள்கள் இயங்கிக் கொண்டு இருப்பதை அறிவியலின் மூலமாக நாம் அறிகின்றோம்.

நம்மை மருட்டுகின்ற அளவிற்கு விண் வெளி தோன்றிக் கொண்டு இருக்கின்றது. நம்மைப் பற்றியோ நாம் இருக்கும் உலகத்தைப் பற்றியோ இவ்வுலகத்தை அடக்கித் தோன்றும் விண் வெளியைப் பற்றியோ நம்மால் எதுவும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நாம் எவ்வாறு உண்டாக்கப் பட்டு இருக்கிறோமோ அது போல அனைத்தும் உண்டாக்கப் பட்டு இருக்க வேண்டும் என்று நாம் ஊகிக்கின்றோம். இவ் வனைத்திற்கும் ஆதாரமாக ஒரு சக்தி விளங்க வேண்டும் என்று உணர்கின்றோம். ஆனால் நமது புலன்களைக் கொண்டும் மனதைக் கொண்டும் நம்மால் இதை உறுதிப் படுத்த முடியவில்லை. தோன்றுகின்ற அனைத்தையும்

இருக்கின்றன என்று உறுதி செய்கின்றோம். புலன்களாலும் மனதாலும் தொட முடியாத ஆதார சத்தியத்தை நாம் உறுதி செய்ய முடியாது வெறும் நம்பிக்கையாய்த் தான் கொண்டு இருக்கின்றோம்.

நாமோ பிறந்து இறக்கப் போகின்ற உடல் கூடி இருக்கின்றோம். விண்வெளிப் பொருட்களோகணத்திற்குக் கணம் மாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றன. இருந்தும் இவற்றை உண்மை எனப் பற்றி இவ் உலகத்தில் இன்பத்தையும், வெற்றியையும், பெருமையையும் நோக்கி நாமும் ஓயாது வினைகளைச் செய்து கொண்டே இருக்கின்றோம். ஆழ்ந்து விசாரித்தால் இது விவேகம் அற்ற வீணான சலனம் என்று தெரிகின்றது. இருந்தும் ஏதோ ஒரு சக்தி கன்மத்தில் நம்மை மீண்டும் மீண்டும் ஈர்த்துப் பிணைத்து விடுகின்றது என்று தெரிகின்றது.

நம்மால் அறிந்துகொள்ள முடியாத சக்தி நாம் எளிதில் வெற்றி கொள்ள முடியாத சக்தி நம்மை ஆள்கின்றது. இதைத்தான் மாயை என்கின்றோம். அசத்திய வாழ்க்கையை சத்தியம் போல் காட்டுகின்றது. அநித்திய வாழ்க்கையை நித்தியம் போல் காட்டுகின்றது. துன்பத்தோடு ஒட்டிப் பிறக்கின்ற இன்பத்தைப் பூரண இன்பம் என்று நம்ப வைக்கின்றது. நான் யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் இன்னார் என்கின்ற மனோ பாவனை என்னை ஆட்டிவைக்கின்றது. இது தான் மாயை. நம்முள்ளே திரண்டு கிடக்கின்ற கரிய மேகங்களாகிய இவ் அறியாமையை அகற்றுவதே பகவானது வாக்கு. அறியாமை அகன்ற பின் நித்தியமாய் விளங்குகின்ற ஞான சூரியனில், தன் அறிவு ஒளியில் நம்மை மெய்ப்படுத்தி நிலைப் படுத்துவது பகவான் வாக்கு.

‘உண்டு ஒரு பொருள். சத்திய வஸ்து ஒரே ஒன்றுதான். புலன்களாலும் மனதாலும் தொடமுடியாவிட்டாலும் உண்மையாய் உள்ள பொருள் அது ஒன்றுதான். எல்லை அற்றுப் பன்மையாய் எவ்வளவு பரந்து கிடந்தாலும்

இவை அனைத்திற்கும் ஆதார சத்தியம் ஒரே ஒன்று தான். அது தான் ஒவ் வொரு சீவன் உள்ளேயும் இருக்கின்றேன் என்று விளங்கும் ஆன்ம சோதி, ஆன்ம சூரியன், ஆன்மப் பிரகாசம். உடலை நான் என்று அறிவது அறியாமை. உண்மையான அறிவு என்பது தான் வேறு ஏதொன்றுமாய் இல்லாமல் இருக்கின்றேன் என்று அறிவதும், வேறு ஏதொன்றையும் தான் அறியாமல் அறிகின்றேன் என்று இருப்பதுமே. இதுவே பரம்பொருள்; அன்னியத்தை அறிவோன், அன்னியமாகிய அறிபடு பொருள் இரண்டையும் தன்னுள் அடக்கி இரண்டையும் கடந்து விளங்கும் பூரண உணர்வு ஒளி, அறிவு ஒளி. இதுவே ஒவ்வொரு சீவனின் சொருபமும், உண்மையும் ஆம்.

உலகு அறிவு ஒன்றாய் உதித்து ஒடுங்கும் ஏனும்
உலகு அறிவு தன்னால் ஒளிரும் — உலகு அறிவு
தோன்றி மறைதற்கு இடனாய்த் தோன்றி மறையாது
ஒளிரும்
பூன்றமாம் அஃதே பொருள் ஆம் ஆல்

என்பது சகத் தோற்றத்திற்கும் சீவ அறிவிற்கும் பிறப்பு இடமாகிய மூலப் பூரணத்தை உறுதி செய்யும் பகவானின் உள்ளது நாற்பதின் கூற்று.

கண நேரத்தில் மின்னலைப் போல் தோன்றி மறைகின்ற தூல உடலை நான் எனக்கொண்டு வாழ்ந்து மடிவது ஒன்று. உடல் மனம் கடந்து, உருவம் வடிவம் அற்று, கால தேசத்திற்கு அப்பால் விளங்கியவாறு கால தேச படைப்பு அனைத்தையும் தன்னிலிருந்தே தோற்றுவித்துத் தன்னிலேயே அடக்கிக் கொள்ளும் வெளி ஒளி, ஞானப் பிரகாசம், இருப்புஅறிவு சோதியாகிய தன் உண்மையில் நிட்டை உற்று நித்தியமாய் விளங்குவது மற்றொன்று.

எப் பெயர் இட்டு எவ் உருவில் ஏத்தினும் ஆர் பேர்
உருவில்
அப் பொருளைக் காண் வழி அது ஆயினும் அம் —
மெய்ப் பொருளின்

***உண்மையில் தன் உண்மையினை ஓர்ந்து ஒடுங்கி ஒன்றுதலே***

***உண்மையில் காணல் உணர்***

*மூலப் பூரணமாகிய அவ் அறிவு ஒளிக்கு என்ன பெயர் வேண்டுமானாலும் இட்டுக் கொள்ளலாம்; அதனை எவ் உருவில் வேண்டுமானாலும் வழி பட்டுக் கொள்ளலாம்; அவரவர் பக்திக்கு ஏற்ப அமையும் சிறந்த நாம ரூபத்தில் அப் பொருளைக் காண்பது அவரவர் வழியாகும். இருந்தும் அம் மெய்ப் பொருளின் உண்மையை அவர்கள் ஓர்ந்து அம் மெய்ப் பொருளின் உண்மையில் தம் உண்மை வேறு இல்லை எனக் கண்டு நீரில் கரைகின்ற பனிக் கட்டி போல பின்ன உயிர் அறிவாகிய தாம் மெய்யாம் பூரண அறிவிலே ஒன்றுகலந்து நித்திய சத்திய தன்மய அறிவு ஆனந்தராகவே ஆகிவிடுவது ஒன்றே உண்மையில் அம் மெய்ப் பொருளைத் தரிசித்தல் என்பதன் பொருள்.*

*இறைவனை அறிவது தனது சொருப உண்மையில் தான் நிட்டை உற்று விளங்குதலே. ஏன் எனில் இறைவனின் உண்மையும் தனது உண்மையும் ஒன்றே. ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளுக்கும் மூலமாகிய மெய்ப் பொருளின் உண்மையும் சீவனின் உண்மையும் ஒன்றே. அம் மெய்ப் பொருளில் இருந்து பிரிந்தது போலும் உண்மை போலும் தோன்றிக் கொண்டு இருக்கும் சீவ அறிவு ஏகமாகிய அம் மெய்ப்பொருளில், ஒன்றேயாய் விளங்கும் அந்த அறிவு ஒளியில், தனது போலிப் பிரதிபலன ஒளி கரைந்து, வெளி ஒளியாய், நித்திய சத்திய அறிவு ஆனந்தமாய் விளங்குவதே பிறப்பின் நோக்கம், இறை வழிபாடு, சாதனைகளின் தீர்ந்த முடிபு.*

*உணர்வோமா, புறமுகம் தவிர்ப்போமா, அகமுகம் ஆவோமா, அக உருவை நன்கு அறிவோமா, முன்னீரில் நதி போல் ஒய்வோமா.*

# ரமணரின் 'இந்த அமைதி' செய்யப்பட்டதல்ல!

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

முனகால வேங்கடராமையா என்ற ரமணபக்தர் ஒருமுறை பகவான் சந்நிதியில் தம்முடைய ஜிக்ஞாஸாவை (அறிவு வேட்கையை) கீழ்க்கண்டவாறு முன்வைத்தார்.

*"பகவான்! தன்னிலை பெறுவது எங்ஙனம்?"*

*பகவான் கூறினார்:*

*"தன்னிலையை இழந்திருந்தால் அல்லவா தன்னிலையைப் பெறுதல் என்பது சாத்தியமாகும்! என்னை நான் இழந்தேன் என்றும், என்னை நான் அடைந்தேன் என்றும் சொல்வதற்கு இரண்டு 'நான்'-கள் இல்லையே! தன்னிலை பெறுதல் எங்ஙனம் என்ற கேள்வியே, நான் ஊமை, என்னால் பேசமுடியாது என்று ஒருவன் கூறுவதுபோல (நான் ஊமை அல்ல என்பதுபோல) வியாகாதம் அதாவது முரண்பாடானது. சுடர்விட்டு ஒளிரும் தீபத்தைக்காண மற்றொரு தீபத்தின் துணையை நாடுவது போன்றது இது.*

*தன்னுடைய கண்ணின் இருப்பைத் தன்னுடைய கண்ணைக்கொண்டே பார்க்க முயற்சிப்பது என்பது பாமரத்தனம் அல்லவா? காட்சிகள் பலவற்றையும் பார்த்து அனுபவிப்பதே கண்ணின் இருப்பிற்கும், அதை உணர்வதற்கும் உரிய நல்ல சாக்ஷியாக இருக்கிறது. அதுபோல நானாகிய சுத்த புத்தமுக்த பரமாத்ம ஸ்வரூபம் இருப்பதால்தான் ஏனைய மற்ற அனுபவங்கள்*

இருக்கின்றன. 'தன்னிலை' ஸ்புடமாக (மிகத்தெளிவாக) விளங்கிக் கொண்டிருக்க, என்னை நான் அறிவது எப்படி என்று முறுகுவது ஏன்?

தன்னை விஷயீகரிக்க (முன்னிலைப்பொருளாக அனுபவிக்க) நினைக்கும் இந்த நான்-ஐ சற்று என்னவென்று விசாரித்துப் பார்த்தால் நமது இயல்பாம் தன்னிலை மட்டுமே எஞ்சி நிற்கும்."

பகவானின் உபதேசம் எப்பொழுதும் சுருக்கமாகவே இருக்கும். ஆனால் அதில் அடங்கியிருக்கும் கருத்துகளோ ஆழ்கடல் ஒக்கும்! நம்முடைய அறிவு, அனுபவம் இரண்டுமே தொண்ணூற்று ஒன்பது சதவீதம் முன்னிலைப்பொருளைப் பற்றியே நிற்கிறது. ஒரு சதவீதம் அறிவு மட்டுமே தன்னிலை அறிவாக, நிர்மலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ராஜவித்யா ராஜகுஹ்யம் என்று கீதை கூறுகிறது. மேலானது, ஆனால் இந்த அறிவு ரஹஸ்யமானது என்பது இதன் பொருள்.

"சொன்னசொல் ஏதுஎன்று சொல்வேன் - என்னைச்
சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி
முன்னிலை ஏதும் இல்லாதே - சுகம்
முற்றச்செய் தேனைப் பற்றிக்கொண் டாண்டி.

என்று தாயுமானவர் கூறுவதுபோல பரம்பொருள் அனுபவத்தை மற்ற அனுபவங்களைப்போல கருதுவது அறிவுக்குப் பொருந்தாது.

ஊர்முழுவதும் தண்ணீரால் நனைந்திருக்கிறது. ஆகவே இரவில் மழை பெய்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யும் அர்த்தா பத்தி ப்ரமாணமும், நீ சொல்லும் பொருள் அங்கு 'இல்லை' என்று அறுதியிடும் அனுபலப்தி ப்ரமாணமும் பகவத் விஷயத்தில் உதவ முடியாமல் சக்தியற்றவைகளாக இருக்கின்றன. ஆகவேதான் ஆஸ்திக, நாஸ்திக சண்டை சழக்குகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

நான் ஏற்கெனவே மழை பெய்வதையும், அதனால் ஊர் முழுவதும் ஈரமானதையும் பார்த்திருக்கிறேன். ஆகவே நேற்று இரவு மழை பெய்வதை நேராகப் பார்க்காவிட்டாலும், தெருவெங்கும் ஈரமாய் இருப்பதை வைத்து மழை பெய்திருக்கிறது என்ற ஞானத்தைப் பெறுகிறேன்.

அதுபோல ஏற்கெனவே எப்பொழுதாவது பகவானை, இறைவனைப் பார்த்திருந்து அந்த அனுபவம் என் அறிவில் இருந்தால், இப்பொழுது பார்க்காவிட்டாலும் பகவான் இருக்கிறார் என்று கூறமுடியும்.

ஆனால் இறைவனோ அப்ரமேயமாக, காட்சிக்கு வராதவராக இருக்கிறார். ஆகவே பகவான் நம்முடைய அறிமுகத்திற்கு அப்பாற்பட்டவர். ஆகவேதான் கடவுள் இருக்கிறார் என்பதை அறிவுபூர்வமாக நிரூபிக்க இயலாமல் போய்விடுகிறது. ஊமையன் கண்ட கனா போல கதை தொடர்கிறது.

இனி நாஸ்திகவாதமோ பரிதாபகரமானது. இல்லை என்பதும் ஒரு ஞானம் என்பதை அறியாமலேயே நாஸ்திகவாதம் செய்வது என்பது பரிதாபத்திலும் பரிதாபகரமானது! அந்த அறையில் பேனா இருக்கிறது. எடுத்துவா என்று ஒருவர் கூற, உள்ளே சென்றவர் பேனாவைக் காணாததால் ‘இல்லை’ என்று கூறுகிறார். ‘இல்லை’ என்று கூறுபவருடைய அறிவில் பேனா இருக்கிறது. காரணம் அவர் ஏற்கெனவே பேனாவைப் பார்த்திருக்கிறார். ஆகவே அவருடைய மனதில் இருக்கின்ற பேனாதான் வெளியில் ‘பேனா இல்லை’ என்ற அறிவாக மலர்கிறது.

அதாவது பார்த்த, அறிந்த ஒன்றின் அடிப்படையை, ஆதாரத்தை வைத்தே அது இல்லை என்ற அறிவு உருவாக முடியும். முற்றிலும் தெரியாத ஒரு பொருளை இல்லை என்று கூறமுடியாது. ‘தெரியவில்லை’ என்றுதான் கூறமுடியும். ஆஸ்திக நாஸ்திக வாதங்கள்

மேலோட்டமானவைகள்; அடிப்படை அற்றவைகள். துஷ்டப்ரமாண ஜென்யம் - தவறான கருவிகளைப் பயன்படுத்தி பெறப்பட்ட அறிவு. ஆகவே தகராறு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பகவான் ரமணரின் ஞானப்பார்வையில் இந்த ஆஸ்திக, நாஸ்திக வாதங்கள் அடங்கிப் போய்விடுகின்றன.

எப்படி?

ஓவியக்கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. மிகச் சிறந்த ஓவியத்தைத் தான் திட்டமிட்டிருந்த விலையில் வாங்க ஒருவர் முயற்சி செய்து கொண்டிருந்தார். ஓவியத்தை விற்பவரோ அதை எப்படியும் நல்ல விலைக்கு விற்றுவிடவேண்டும் என்று தீர்மானித்திருந்தார். விற்பவரும், வாங்குபவரும் பணத்தை மட்டும் குறியாகக்கொண்டு பேரம்பேசி வாதம் செய்துகொண்டிருக்க, புத்திசாலியான வழிப்போக்கன் ஒருவன் அமைதியா நின்று அகமகிழ ஓவியத்தை ரசித்துக் கொண்டிருந்தானாம். அவன் வெற்றியடைந்தான் என்று தேவர்கள் பூமாரி பொழிந்தார்களாம்!

ரமணரின் பாதை இந்த வழிப்போக்கனைப் போன்றது. பகவானின் குறிப்பு இந்த இருக்கிறது, இல்லை என்ற வாதத்திலிருந்து நம்முடைய கவனத்தை மீட்டு எடுத்து ஸ்வதசித்தமாய், என்றும் தானே விளங்கிக் கொண்டிருக்கும் ஆஸ்ரமத்தை மௌனமாய் பருகச் செய்கிறது.

ஆஸ்திகனோ, நாஸ்திகனோ அமைதியை, ஆனந்தத்தைத் தனக்கு இஷ்டமாகத் தேடாதவர் உளரோ? எல்லோருக்கும் சாந்தம் என்பது சம்மதம். ஆனந்தோபாஸத்தை (ஆனந்தத்தின் நிழலை) ஐம்புலன்கள் வழியாகத்தேடி ஓடுபவர்கள் உண்மையில்

ஆனந்தமே வடிவான பிரம்மத்தையே நாடுகிறார்கள் என்பதைத் தெரியாமல் தேடி ஓடுகிறார்கள். தங்களுடைய நிஜ சொரூபமாக ஆனந்தத்தை உணராமல் இந்த ஓட்டம், இந்தத் தர்க்கவாதம் ஓயப் போவதில்லை என்று பகவான் கூறுகிறார்.

'நாஸ்தி அக்ருதக்ருதேன' - செயலற்ற பிரம்மத்தை செயலால் அடைய முடியாது என்று முண்டக உபநிஷத் கூறுகிறது. பேரானந்தமே வடிவான நமது நிஜசொரூபத்தை நாம் எப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொண்டு தேடினாலும் அடையமுடியாது; அடையவேண்டிய அவசியம் இல்லை என்று சாஸ்திரம கூறுகிறது. காரணம் மெய்ப்பொருள் சித்த வஸ்துவாக, என்றும் நான் நான் என்று ஸ்வயமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

பகவான் ரமணரிடம் வருபவர்கள் பலவகையிலும் தங்களுடைய மனக்குறைகளைக் கூறுவார்கள். பகவானுடன் இருக்கும் நாட்களில் தாங்கள் பரமசாந்தியுடன் பேரானந்தத்துடன் இருப்பதாகவும், தொடர்ந்து பகவானுடனேயே இருந்துவிட விரும்பவதாகவும் கூறுவார்கள்.

பகவானோ புன்னகையுடன் கூறுவார்:

"ஆச்ரமத்தில் இப்பொழுது நீர் அனுபவிக்கும் மனச்சாந்தி என்பது வாஸ்தவம் அன்று. சில நாட்களில் இதுவும் அலுத்துப் போய்விடும். மனம் வேறு ஒன்றை நாடி ஓடும். அமைதி வேறு எங்கோ இருக்கிறது என்று நீயும் நடையைக் கட்டிவிடுவாய். பிரச்சினையின் மூலத்தைப் புரிந்து கொள்ளாத வரை நான் தருகின்ற தீர்வுகள் உன்னை மேலும் குழப்புவதாகவே அமையும். ஆகவேதான் அமைதியை நாடுகிற நீ யார் என்று முதலில் பார்த்துவிடு என்று கூறுகிறேன். மனஅமைதி என்பது உன்னுடைய நிழல் போன்றது. அதை நீ தேடி ஓடினால்

அதுவும் ஓடிக் கொண்டிருக்கும். மாறாகக் கவனத்தை உன்மேல் மட்டும் குவிக்கும் நான் யார் என்ற விசாரத்தால் உன்னுடைய சொரூபம் விளங்கும்பொழுது இந்த அமைதி, அமைதியின்மை போன்ற சச்சரவுகள் ஓய்ந்து போய்விடுகின்றன."

அமைதியைக் காட்டித் தருவதாகக் கூறும் ஆன்மிக மார்க்கங்கள் பலவும் பெரும்பாலும் கட்டுசோறு கட்டி நம் கையில் கொடுக்கின்ற கார்யத்தையே செய்கின்றன. கட்டுசாதம் எவ்வளவு காலம் நம்முடைய கைவசம் இருக்கும்? ஒருநாள் அது தீர்ந்து போகும். அப்பொழுது நம்முடைய பசியைத் தீர்க்க வேறு ஒரு கட்டுசோறு மூட்டையை, வேறு ஒரு மார்க்கத்தை நாடுவோம். ஆனால் பகவான் ரமணரின் வழிகாட்டுதலோ நமக்கு ஸ்வயம்பாகத்தை, நாமாகச் சமைத்துச் சாப்பிடும் கலையைப் போதிக்கிறது.

தோற்றுவிக்கப்படும் கோசானந்தத்தை, மனதைச் சார்ந்து வருகின்ற அமைதியை பகவான் ரமணர் ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. சமாதிக்கு முயலும் சாதகர்களைக் குறித்து பகவான் எச்சரிப்பதைப் பார்க்க வேண்டும். பூஜை, தியானம், பிராணாயாமம் போன்றவை ஆத்மசஹாயங்களே யன்றி ஆத்மசாதனம் அல்ல என்பது பகவானது தீர்ப்பு.

*சாதகத்திலே துவிதம் சாத்தியத்தில் அத்துவிதம்*
*ஓதுகின்ற வாதம்அது உண்மையல — ஆதரவாய்த்*
*தான்தேடும் காலுந் தனைஅடைந்த காலத்தும்*
*தான்தசமன் அன்றியார் தான்.*

பொருள்: சாதனத்தை அப்யாஸிக்கும் காலத்தில் த்வைதம் உண்மை. சாதித்து முடித்த ஆரூடி நிலையில் (முக்தி நிலையில்) அத்வைதம் உண்மை என்று சொல்லப்படுகிற கூற்றானது முற்றிலும் தவறானது. காரணம் தசமன் (பத்தாவது மனிதன்) காணாமல் போனதாக நினைத்துத் தான் பத்தாவது மனிதனைத்

தேடும்போதும், பிறகு தன்னையே அந்தப் பத்தாவது மனிதனாகக் கண்டுகொண்டபோதும், எப்பொழுதும் தான் பத்தாவது மனிதனே அல்லாமல் வேறுயார்? (புதிதாகப் பத்தாவது மனிதன் தோன்றவில்லை என்பது கருத்து).

பகவான் ரமணரின் உபதேசங்கள் சாதகனின் மனோவியாபாரத்தை நீட்டிக்கொண்டே செல்வதைத் தடுக்கின்றன. அளவுகோலே தவறாக இருக்கும்பொழுது யார் அளந்தாலும் தவறாகத்தான் இருக்கும். 'நான்' என்ற அளவுகோல் சரியாக இருக்கிறதா என்பதே ரமண விசாரணையின் மையக்கருத்தாக இருக்கிறது.

யார் எவ்விதம் கேள்விகள் கேட்டாலும் கேள்வியை நீட்டாமலும், மேலோட்டமாகப் பதில் கூறாமலும் கேள்வி கேட்பவரையே துருவி ஆராய்ந்து துரியமே உன் நிஜஸ்வரூபம் என்பதைச் சாதித்துக் காட்டுவதே பகவான் ரமணரின் ஞானவைத்தியமுறை!

நாந்தப்ரக்ஞம்
ந பஹிப்ரக்ஞம்
ந உபயதப்ரக்ஞம்
பொருள்: வெளிவிஷயங்களை அறிபவன் அல்ல;
உள்விஷயங்களை அறிபவன் அல்ல;
இடைப்பட்ட நிலையில் இருப்பவனும் அல்ல;

என்று மாண்டூக்ய உபநிஷத் கூறுகிறது.

பரப்ரம்மத்தைத் தவிர அனைத்தும் திருசியமாகவே (பார்க்கப்படும் பொருளாகவே) இருக்கிறது. பரப்ரம்மமோ நான், நான் என்று ஸ்வயம்புலிங்கமெனத் திகழ்கிறது. நன்கு பக்குவப்பட்ட சாதகர்களுக்கு (ஸம்ஸ்க்ருத ஜனாஹா) பிரம்ம ரஹஸ்யம் விளங்குகிறது. பக்குவம் இல்லாத லௌகீக (ப்ராக்ருத ஜனாஹா) மக்களுக்குப் பிரம்மம் என்றும் ரஹஸ்யமாகவே இருந்துவருகிறது. பகவான் ரமணரின் உபதேசம்

ப்ராக்ருத, ஸம்ஸ்க்ருத ஜனங்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கிறது. வெளிமுகம் கொண்ட லௌகீக மக்களை அவர்களுக்குள் திரும்பச் செய்தும், உள்முகம் கொண்ட பக்குவிகளை எதனாலும் உருவாக்கப் படாத ஸஹஜ நிஷ்டையிலும் இருக்கச் செய்கின்ற கார்யத்தை ரமண சந்நிதி செய்துகொண்டிருக்கிறது.

*தானாய் இருத்தலே தன்னை அறிதலாம்*
*தான்இரண்டு அற்றதால் உந்தீபற*
*தன்மய நிட்டைஈது உந்தீபற.*

'ஏக ஆத்ம ப்ரத்யய ஸாரம்' நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியக்கூடியது என்று உபநிஷத் கூறுகிறது. முத்துமாலையில் ஊடுருவிச் செல்லும் நூல்போல் நமது அனைத்து அனுபவங்களுக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் நான்-ஐ கவனியாத அலட்சியமே ஸம்ஸார காரணம் என்று பகவான் அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

"மனம் தியானத்தில் ஆழ்ந்து செல்லும்பொழுது தூக்கம் போன்ற ஒருநிலை வருகிறதே! பகவான் சுட்டிக்காட்டும் ஆத்ம ஸ்திதி அப்படிப்பட்டதா?" என்று அன்பர் ஒருவர் வினவினார்.

பகவான் கூறினார்: இதுவா, அதுவா, இப்படியா, அப்படியா என்பதெல்லாம் வெறும் மனோவியாபாரமே. விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நனிவிளங்கிக் கொண்டிருக்க வீணே ஏன் நூதன அனுபவத்திற்கு ஏங்கவேண்டும? இனிமேற்கொண்டு அடைவதாக இருந்தால் அந்த விஷேஷ லாபம் பிறிதொரு காலத்தில் நஷ்டமாய்விடும் அல்லவா? போக்கும் வரவும் அற்ற உன் இயல்புநிலையில் இருக்க வேண்டியதுதான் உனது கடமை. மற்ற அப்யாஸங்கள் அனைத்து 'அந்த ஒன்றுக்கு அனுகூலமாக இருக்கலாம். மற்றபடி எதிர்கால நிகழ்வு என்பது ஒன்றும் இல்லை. இங்கேயே, இப்பொழுதே நீ அதுவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறாய்."

அதாவது நான் அல்லாத விஷயங்களின் பின்னே ஓடுவதை விட்டுவிடு. நான்-ல் மட்டும் நின்று பார் என்பது ஸாரம்.

சிற்றோடை, சிரிய நீர்த்தேக்கங்களில் தங்கி நின்று விடாமல் நம்மைச் சமுத்திரத்திற்கு அழைத்துச் செல்லும் கங்கையின் பிரவாகம் போன்றது ரமணரின் வழிகாட்டுதல்!

சாதகர்கள் எவ்வகையிலும் ஏதோ ஒன்றைச் சார்ந்து பெறுகின்ற அமைதியிலோ, அல்லது அமைதியின்மையிலோ இருந்துவிட பகவான் அனுமதிப்பதில்லை.

பகவான் ரமணரின் நான் யார் என்ற விசாரம் என்பது பயணம் அல்ல. நம்மையே நமக்கு ஞாபகப்படுத்தும் ஒருமுயற்சி. அவ்வளவுதான்!


## ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

வஸந்தா ராகவன் 9445432335

# ரமணரை அறிந்திடவா பாப்பா

**ரமண ராஜசேகர்**

*ரமணரை அறிந்திடவா பாப்பா! — அந்த*
*ரமணீச இன்பத்தைப் பெற்றிடலாம் பாப்பா!*

*ரமணரை அறிந்தாலே போதும்! — உன்னில்*
*ராப்பகலா ஆனந்தம் உள்ளத்திலே மோதும்!*

*அருணமலை என்றாலே பாப்பா! — நெஞ்சில்*
*அருணாசல ரமணீச பகவானை நினைப்பா!*

*பழம்போல சுவையான பகவான்! — நல்ல*
*பாகான கருத்துக்கள் உள்ளத்திலே தருவார்!*

*கவிபாடி ரமணரைப் போற்று! — கும்மி*
*கோலாட்டம் விளையாடி அருள்நெஞ்சில் ஏற்று!*

*புரியாத உலகமும் புரியும்! — ரமணம்*
*புரிந்தவுடன் உன்வாழ்வு இன்பமாய்த் தெரியும்!*

*கண்ணாலே அருள்தந்தார் பாப்பா! — அவரைக்*
*கண்டவர்கள் மெய்மறக்க ஆனந்தம் வரும்பா!*

*கடவுளின் அவதாரம் ரமணர்! — அவரைக்*
*கருத்தோடு அறிந்திடுநீ வாழ்வுதரும் பூரணம்!!*

# படித்தால் மட்டும் போதுமா? பகவானைப் படியுங்கள்!

**சேலம் சேதுகுமாரன்**

இந்திய வரலாற்றின் ஆன்மிக எழுச்சிக்கு மிகச் சிறந்த பரிமாணம் உபநிடதங்களின் வாயிலாக விவரிக்கப்படுகிறது. எத்தகைய சடங்கும் இன்றி, மனிதனை நேரே மெய்ம்மையின் தேடலுக்கு உபநிடதங்கள் அழைத்துச் செல்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னர் பகவான் ரமணர் உலகுக்கு உணர்த்திய நேர்வழியான விசார மார்க்கத்தின் விதை, உபநிடதங்களிலும் தெரிகிறது. எனவே ஜெர்மானிய தத்துவஞானி ஷோபன்ஹோர் உபநிடதங்களை "ஆன்மாவின் எழுச்சியின் இமாலய சிகரங்கள்" என வர்ணித்தார். உபநிடத, அறிவூட்டல் வெறும் ஏட்டுச் சுரைக்காயாய் அல்ல. முற்றும் அறிந்த ஞானி ஒருவர் தனது மாணவனுக்கு ஆன்மாவை அறியும் நேர்வழி காட்டலையே உபநிடதங்கள் விளக்குகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே காண்போம்.

மகாவாக்யங்களில் ஒன்றான 'தத்வம் அஸி' என்பது சாந்தோக்ய உபநிடதத்தில், உத்தாலக ஆருணி தனது மகனும் பின்னர் மாணவனும் ஆன ஸ்வேதகேதுவுக்கு வழிகாட்டல் பொருட்டு வருவது.

தனது மகனைப் பன்னிரண்டு வருடம் ஒரு தக்க குருவிடம் குருகுல ஆச்ரம வழியாகக் கற்க ஆருணி அனுப்பி வைத்தார். அதன்படி ஸ்வேதகேது தனது இருபத்தி நான்காவது வயதுவரை, குருகுலத்தில் இருந்து

*வேதங்களையும் அக்காலத்தில் இருந்த எல்லாக் கல்வித் துறைகளையும் கற்றறிந்து, நான் எல்லாவற்றிலும் கரைகண்ட மேதாவி என்ற இறுமாப்புடன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.*

*அதைக் கண்ட ஆருணி, ஓர் அணுகுண்டு கேள்வியைப் போடுகிறார். "மகனே! எல்லாவற்றையும் கற்று அறிந்து கொண்டு விட்டதாக எண்ணிக்கொண்டு இருக்கிறாயே! படிப்புக்கும் எட்டாத பொருளை எவ்வாறு உணர்வது என்பதைத் தெரிந்துகொண்டு வந்தாயா! எந்த ஒன்றை அறிந்தால் எல்லாவற்றையும் அறிவோமோ அதைத் தெரிந்து கொண்டாயா?" என்று வினவினார்.*

*திடுக்கிட்ட இளைஞன், "எனக்குத் தெரியாதே" என்று அலமந்தான். இப்போது சாந்தோக்ய உபநிடதத்தில், ஆருணி காட்டும் விஞ்ஞான பூர்வமான ஆன்மிக ஆய்வுப் பாடம் துவங்குகிறது.*

*ஸ்வேதகேது தன்னுடைய தந்தையாகிய உத்தாலக ஆருணியிடம், தந்தையே! நாம் வாழும் உலகம், வானம், கடல்கள், விண்மீன் அனைத்தும் எங்கிருந்து வந்தன?" என்று வினவினான்.*

*ஆருணி: மகனே! இத்தகு பல்வேறு விதமான உயிர்கள், தாவரங்கள் மற்றும் அனைத்துமே ஒரு சக்தியிலிருந்தே பிறந்தன.*

*ஸ்வேதகேது: தந்தையே! அனைத்தும் ஒரே சக்தியில் இருந்து வந்ததாகக் கூறுகிறீர்களே! இவ்வுலகில் எத்தனை விதமான வேறுபாடுகள் உள்ளனவே! இந்த உலகம் அனைத்தும், இந்தப் பல்லாயிரக்கணக்கான வேறுபாடுகள் கொண்ட அனைத்தும் நாமரூபங்கள் அற்ற ஒரே ஒன்றிலிருந்து எப்படி வந்திருக்கும்?*

*ஆருணி: மகனே! அங்கே பார்! அங்கே படர்ந்து வளர்ந்திருக்கும் ஆலமரம் உள்ளதல்லவா! அந்த ஆலமரத்தின் பழம் ஒன்றைக் கொண்டு வா!*

*ஸ்வேதகேது ஒரு பழத்தைக் கொண்டுவந்து தந்தான்.*

*ஆருணி: இந்தப் பழத்தைக் கிள்ளுவாய்!*

*ஸ்வேதகேது அக்கணமே அச்சிறிய பழத்தைத் தன் நகங்களால் கிள்ளி உரித்தான்.*

*ஆருணி: மகனே! அந்தப் பழத்தின் உள்ளே என்ன இருக்கிறது?*

*ஸ்வேதகேது: மிகச் சிறிய விதைகள் உள்ளன.*

*ஆருணி: அவற்றில் ஒன்றை எடுத்துக் கிள்ளிப் பார்!*

*ஸ்வேதகேது: இதோ! கிள்ளிவிட்டேன் தந்தையே!*

*ஆருணி: உள்ளே என்ன காண்கிறாய்?*

*ஸ்வேதகேது: ஒன்றுமே கண்ணுக்குப் புலப்படவே இல்லையே!*

*ஆருணி: மகனே! உன் கண்ணுக்குத் தெரியாமல் அந்த மிகச் சிறிய விதைக்குள் உள்ள மிக மிகச் சிறிய நுண்பொருளே பலவேறு திசைகளில் பரந்து கிடக்கும், இலைகளும் கிளைகளும் விழுதுகளுமாய் பரவிக் கிடக்கும் இந்த ஆலமரமாகிறது.*

“தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெள்நீர்க் கயத்துச் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர், புரவி, ஆள் பெரும்படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே” - வெற்றிவேற்கை

*நன்கு வளர்ந்த ஆலமரத்திலுள்ள, கனிந்த ஆலம்பழத்தில் உள்ள ஒரு சிறு விதையானது சிறிய மீனின் முட்டையை விடவும் சிறிதாக இருப்பினும் கூட, அந்த விதையால் உருவான ஆலமர நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட் படை என்னும் நால்வகைப் படையைக் கொண்ட மன்னனும் தங்க முடியும் என்பதை அதிவீரராம பாண்டியர் வியந்து பாடுகிறார்.*

ஆருணி கூறினார்: "மகனே! இந்தப் பெரிய ஆலமரம் முழுதும் அந்த மிகச் சிறிய விதைக்குள் கண்ணுக்குத் தெரியாமல் அடங்கியுள்ளது அல்லவா? இங்ஙனமே உலகம் உட்பட இப்படைப்பு முழுவதும் கண்ணுக்குப் புலப்படாத அந்தப் பரத்திலிருந்து உண்டாகியது." மிகச்சிறிய அந்த ஆலம் விதைக்குள் மிகப் பெரிய மரமும், கிளைகளும், விழுதுகளும், காயும், அவற்றின் நிறம், சுவை அனைத்தும் ஒடுங்கிக் கிடந்துள்ளன. இந்த விதையை எங்கே நட்டாலும் இதே குணாதிசயங்களைக் கொண்ட ஆலமரமே உருவாகும். இந்தப் பெரிய ஆலமரம் இச்சிறிய விதைக்குள் நுண்ணிய அருவாய்க் கிடக்கிறது. அதேபோல் பரந்து கிடக்கும் அகிலம் முழுதும் அருவமாக உள்ளது என்று விளக்கினார் ஆருணி.

அகிலம் முழுதும் இந்தப் பரம்பொருள் பரவி இருந்தது என்றால் அது எவ்வாறு மறைந்து போனது? நாம் பௌதிக உலகைத்தானே காண்கிறோம்! இதன் ஆதாரமான பரம்பொருள் கண்ணுக்குத் தென்படவில்லையே?" என்று கேட்டான் ஸ்வேதகேது. இதற்கு ஆருணி பதில் சொன்ன விதம், பிரான்ஸிஸ் பேகன் பிற்காலத்தில் விளக்கிய 'விஞ்ஞான ஆய்வு வழியை'ப் பலவிதத்திலும் மிஞ்சியதாய் உள்ளது. உத்தாலக ஆருணி தன் மகனை ஓர் உப்புக்கட்டி கொண்டு வந்து அதைத் தண்ணீரில் போடச் சொன்னார். பிறகு மறுநாள் காலை வரச் சொன்னார்.

மறுநாள் தன்னிடம் வந்த மகனிடம், நேற்று நீரில் போட்ட உப்பைக் கொண்டு வா என்றார். ஸ்வேதகேது பார்த்தபோது, உப்பே தெரியவில்லை. அது முழுதும் நீரில் கரைந்து போய் இருந்தது. 'அப்பா! நீரில் உப்பைப் பார்த்தால் தெரியவில்லை. அது முற்றும் அழிந்துபோய் உள்ளது' என்றான்.

தந்தை: அப்படியா! தண்ணீரின் மேல்பாகத்தில் சற்று எடுத்துக்குடி.

*மகன்: நீர் உவர்ப்பாய் உள்ளது.*

*தந்தை: மத்தியில் குடித்துப் பார்.*

*மகன்: அதுவும் உவர்ப்பாய் உள்ளது.*

*தந்தை: அடித்தண்ணீர் அருந்திப் பார்.*

*மகன்: அதுவும் அப்படியே உள்ளது.*

*தந்தை: தண்ணீரைக் கொட்டிவிட்டு வா.*

*மகன் கொட்டிவிட்டு வந்தபின் தந்தை கேட்டார். "நீ தண்ணீரில் போட்ட உப்பு அழிந்து போய் விட்டதா?"*

*இல்லை, ஏதோ ஓர் உருவமாகவோ, அருவமாகவோ அது தண்ணீரில் இருந்துகொண்டே இருக்கிறது என்றான் மகன்.*

*ஆருணி விளக்கினார்: "மகனே! இவ்வாறு உலகம் முழுதும் பரமாத்மா பரவி உள்ளது. கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அனைத்திலும் அது உள்ளது. அதுவே ஸத். அதுவே ஆத்மா. அதுவே நீ தத்வம் அஸி!"*

*இந்த ஞானத்தைப் பெறும் வழியை ஆருணி உபதேசிக்கிறார்.*

*"ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காரிருள் வனத்தில் திருடர்கள் விடுவதுபோல், நமது கர்மங்களும், வாசனைகளும் நமது ஞானத்தை மறைத்து மோகமாகிய திரை கொண்டு நம் ஞானக்கண்ணை மூடி பிரபஞ்சம் என்னும் காட்டில் நம்மைக் கொணர்ந்து விட்டுள்ளன. நாம் இருக்கும் இடம் எது. நாம் இருக்கும் ஊருக்குச் செல்லும் வழி எது என்றறியாமல் மயக்கத்தில் உள்ளோம். தகுந்த குருநாதன் கிடைத்துக் கட்டுகளை அவிழ்த்தால் கண்கள் திறக்கப்படும் சரியான வழி அறிந்து நமது ஊர்போய்ச் சேரலாம். மோகம், ஆசை போன்ற திரைகள் நீங்கினால், கண்ணை மறைகும் கட்டுகள் அவிழ்ந்தால் ஞானக்கண் தெரியும். அறிவு ஒளிவரும்.*

*நம்முடைய உண்மை ஸ்வரூபம் தெரியும். இதுவே வழி!"*

பகவான் நம்முடைய மனக் குழப்பத்தை நீக்கி ஒரு அழகிய உதாரணம் கூறுகிறார்:

*மணிகளிற் சரடென வுயிர்தொறு நானா*
*மதந்தொறு மொருவனா மருவினை நீதான்*
*மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்*
*மறுவறக் கடையநின் னருளொளி மேவும்*

*(அருணாசல அஷ்டகம், 5)*

பொருள்: மாணிக்கமாலையின் அத்தனை மணிகளையும் இணைத்து உட்செல்லும் சரடுபோல் எல்லா ஜீவன்கள் உள்ளேயும் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்றாய். ஓர் இரத்தினத்தை சாணை கொண்டுக் கடையக்கடைய அதன் பிரகாசம் மிகுவதுபோன்று, 'நான் யார்?' என்னும் விசார சாணையால் மனதைக் கடையக்கடைய உள்ளே ஞான விகாசம் பிரகாசிக்கும்.

மீண்டும் ஆருணி கூறிய உப்பு உதாரணத்தைக் காண்போம். உப்புக்கட்டிக்கு உள் என்றும் புறம் என்றும் உருவ வேறுபாடு இல்லை. நீரில் அது கரைந்தவுடன், அத்தனை பொருண்மையும் மறைந்து, உவர்ப்பு என்றும் சுவை உணர்வாகவே மாறிவிடுகிறது. அவ்வாறே ஆத்மா தன்னைத்தான் உணர்ந்தபின், பஞ்ச பூதங்களை விட்டு பரம்பொருளுடன் கலந்து ஒன்றாகி விடுகிறது. பிறகு அதற்கு 'தான்' என்ற தனித்துவமோ, தன்னறிவோ கிடையாது.

அஞ்ஞானம் பெற்றவுடன் 'நான்' காணாமல் போய்விடுவேன் என்றவுடன் சாதகனுக்கு ஒரு தயக்கம் எழலாம். யாக்ஞவல்கியரின் உபதேசத்தைக் கேட்ட, மைத்ரேயிக்கும் இவ்வாறு துணுக்கம் ஏற்பட்டது. உடனே மனைவிக்கு விளக்குகிறார். இரண்டு வெவ்வேறு பொருட்கள் இருந்தால்தான் ஒன்றை மற்ற ஒன்றைப் பார்ப்பதும், தொடுவதும், கேட்பதும், அறிவதும் கூடும்.

எல்லாமே ஒரே ஒரு பொருள், வேறு ஒன்றும் இல்லை என்ற அத்வைத நிலையில் ஒன்று மற்றொன்றைப் பார்ப்பதோ, கேட்பதோ, அறிவதோ எது?

அறிவே ஆத்மா. அதுவே பரம்பொருள். அதற்குமேல் அதனை எதைக் கொண்டு அறிய முடியும்? இது இல்லை, அது இல்லை என்று ஒப்புமைதான் கூறமுடியும். வேறு இலக்கணம் எதுவும் கூறமுடியாது. அறிவானும், அறியப்படும் பொருளும் ஒன்றான பின் அறிதல் என்பது ஏது என்று விளக்கினார் முனிவர்.

"அறிவு அறியாமையும் அற்ற பொருளே அறிவாகும்" என்று பகவான் உபதேச உந்தியார் 27-இல் கூறுகிறார். உள்ளது நாற்பது பாடலிலும் இதே கருத்தை விளக்குகிறார்.

*அறிவுஅறி யாமையும் அற்றதுஅறி வாமே*
*அறியும் அதுஉண்மைஅறிவு ஆகாது — அறிதற்கு*
*அறிவித்தற்கு அன்னியம்இன் றாயவிர்வ தால்தான்*
*அறிவாகும் பாழ்அன்று அறி.*

*(உள்ளது நாற்பது, 12)*

இதன்பொருள்: மெய்ஞ்ஞானம் என்பது அறிவு, அறியாமை என்ற இரண்டையும் கடந்ததாகும். தன்னை அன்றி பிற உலகை அறிவது உண்மை அறிவு ஆகாது. ஆத்மா தானே ஸ்வயமாய் ஒளிர்வது. அதை அறிவிக்க வேறு ஒன்று இல்லை. ஆத்மாவே முழு ஞானம். இது சூன்யம் அல்ல (பூர்ணம்).

மீண்டும் ஆருணியின் உபதேசம் தொடர்ந்தது. மகனே! ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் திருடர்கள் கொண்டுபோய் விடுவதுபோல், முன்செய்த வினைகள் நமது உண்மை அறிவை மறைத்து மோகம் என்ற திரையால் நமது கண்களைக் கட்டி இந்தப் பிரபஞ்சம் என்ற அடர்ந்த கானகத்தில் நம்மைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றன. நாம் இருக்கும் இடம் எது, நம்முடைய ஊருக்குத் திரும்பிச் செல்லும்

வழி எது என்று அறியாமல் மயக்கத்தில் கிடக்கிறோம். தகுந்த ஆசான் கிடைத்துக் கட்டு அவிழ்க்கப்பட்டால் வழிகள் திறக்கப்பட்டு வழிதேடி நம் ஊர் போய்ச் சேரலாம். ஆசைத்திரை அவிழ்ந்தால் கண்கள் ஞான ஒளி பெறும். நாம் யார் என்னும் உண்மை சொரூபம் நமக்குத் தெரிய வரும். இல்லாவிடில் எந்த முயற்சியும் பயன்தராது.

பகவான் ஏகான்ம பஞ்சகத்தில் கூறுகிறார்.

தானிருந்துந் தானாகத் தன்னைத்தா னானெவன்<br>
யானிருக்குந் தான மெதுவெனக்கேட் — பானுக்கு<br>
யானெவ னெவ்விடம் யானுள னென்றமது<br>
பானனை யீடு பகர்.

பொருள்: ஒரு குடிகாரன் மது மயக்கத்தில் 'நான் யார்?' 'நான் எங்கே இருக்கிறேன்?' என்று உளறுவான். அதுபோலவே அறியாமையாகிய மதி மயக்கத்தில் இருக்கும் அஞ்ஞானி, தான் ஆத்மாவாக ஒளிர்வதை அறியாமல், தன்னைத் தானே 'நான் யார்? நான் எங்கே இருக்கிறேன்?' என்று மயங்குகிறான்.

'நான் யார்?' என்ற கேள்வி ஆத்மவிசாரம் பற்றி எழும்போது அது வழிகாட்டி ஆகிறது. அதுவே, மனக் குழப்பத்தினால் எழும்பும்போது, மயக்கத்திற்கே ஏதுவாகிறது.

பரம்பொருள் எங்கும் பரவியிருக்கும் உண்மையை முண்டக உபநிடதம் அழகிய உவமை மூலம் விளக்குகிறது.

"சிலந்திப் பூச்சி தன்னிலிருந்து நூலை உண்டாக்கி அதைப் பற்றிக் கொண்டு நிற்கிறது. அதைப் போலவும், பூமியிலிருந்து செடிகள் முளைப்பதைப் போலவும் தலையிலும் உடலிலும் ரோமங்கள் முளைப்பது போலவும் இந்த உலகம் அனைத்தும் பரம்பொருளிலிருந்து வந்தவை."

*“முன்னால் இருப்பதும் பிரம்மம். பின்னால் இருப்பதும் அதுவே. வலமும் இடமும் மேலும் கீழும் இந்த அண்டம் முழுதும் எல்லையற்ற தெய்வீகம் பரவி நிற்கிறது.”*

*பகவானும் இந்த உபநிடதக் கருத்தை ஞானாசார விசார படலம் 19வது பாடலில் கூறுகிறார்.*

**உள்வெளிமேல் கீழ்நடுதிக் கோர்சிறிது மின்றியே**
**யுள்ளவுரு வெல்லாமா யோருருவு — மில்லதாய்த்**
**தான்றனக்கே வேத்தியமாய்த் தானே யிலங்கிடுமாற்**
**பூன்றமா மொன்று புணர்.**

*பொருள்: உள்ளும் வெளியும், மேலும் கீழும், நடுவும் என்ற திக்குகள் ஒரு சிறிதும் இல்லாததாய் உலகத்தில் தோன்றும் அத்தனை உருவங்களுமாய் தனக்கென்று ஒருவிதமான உருவமும் இல்லாததாய் தன்னைத் தன்னாலேயே அறியக் கூடியதாய் தன்னைத்தானே பிரகாசித்தும் கொள்வதாய் விளங்கும் அப்படிப்பட்ட பரிபூர்ணமான ஏகாத்ம சொரூபத்தைச் சார்வாயாக!*

*நம்மாழ்வார் தனது திருவாய்மொழியில்*

**கரந்தசில் இடம்தொறும் இடம்திகழ் பொருள்தொறும்**
**கரந்துஎங்கும் பரந்து உளன்.**

*என்று பரமாத்மா சர்வ வியாபியாய் இருப்பதைக் கூறுகிறார்.*

*பகவானின் நிழலில் உபநிடதக் கருத்துக்களைப் பயில்வதைத் தொடர்வோமா?*

*(கட்டுரைகள் குறித்துக் கருத்துப் பரிமாற விரும்புவோர் ஆசிரியரை 9445755557 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.)*

# பகவானின் ரஸவாதம்

*பிரசித்தி பெற்ற பத்திரிக்கையாளர் திருமதி சாந்தா ரங்கசாமி 'மௌன்டன் பாத்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்று இருந்தவர். பன்னிரண்டு வயதில் பகவானைச் சந்தித்த அனுபவத்தை எழுதுகிறார்:*

நான் ஆச்ரமத்திற்கு என் குடும்பத்துடன் எனது 12 ஆவது வயதில் சென்றிருந்தேன். உள்ளே சோஃபாவில் தங்க நிறத்தில் இதுவரை நான் கண்டிராத ஒளிமிகுந்த முகத்துடன் ஒரு உருவம் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அந்த முகத்திலிருந்து கண்ணை எடுக்க முடியாமல் அந்த இடத்திலேயே நிலைகுத்தி நின்றேன். நாற்பது ஆண்டுகள் கழித்து இன்று நான் அதை நினைத்தாலும் என் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. நான் எவ்வளவு நேரம் அங்கேயே அப்படியே நின்றிருந்தேன் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஏதோ ஒரு சமாதி அனுபவத்தில் இருப்பதுபோன்ற உணர்வுடன் நான் பகவானை அணுகி, அவர் பாதங்களைத் தொட்டேன். பகவானையாரும் தொடக்கூடாது என்ற சம்பிரதாயம் உள்ளதால், அங்கிருந்த பக்தர்கள் என்னைச் செய்யக் கூடாத ஒன்றைச் செய்தவளைப் போல உறுத்துப் பார்த்தனர். நான் மெதுவாக நகர்ந்து பலகணிக்கு அருகே வந்து அமர்ந்தேன்.

அமர்ந்தவுடன், என் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அந்த அருட்காலை நேரம் முழுவதும் நான் என் கண்ணீரைத் துடைத்தபடியே அமர்ந்து இருந்தேன். நான் இதுவரை வாழ்நாளிலேயே கண்டிராத வகையில் அந்தத் திருமுகம் சக்திவாய்ந்த உள்நாட்டத்துடனும் அதேசமயம் அப்பழுக்கற்ற குழந்தைபோல் ஒளிர்ந்தது. அவரிடம்



யாராலுமே விவரிக்க இயலாத, மறுதலிக்க முடியாத மாபெரும் ஆத்மீக சக்தி இருந்தது. அது என்னை முழுமையாக ஆட்கொண்டது. அவர் தனது மலர் நயனங்களில் தனது தனிமனித நோக்கற்ற அதேசமயம் கவனத்தை ஈர்க்கும் தன் பார்வையை என்மீது செலுத்தினார். பகவானின் முன்னிலையில் பேச்சு என்பதே அவசியமற்றதாயிற்று. அவரது முன்னிலையில் முற்றிலும் என்னைக் கவ்விய பேரானந்த நிலையில் மூழ்கி இருந்தேன்.

*[Face to Face with Bhagavan என்ற நூலிலிருந்து...]*

# நூல் விமரிசனம்

## *"முன்வினைப்பயன்" - ஆசிரியர் ராமமூர்த்தி*

*மஹாபாரதம் ஒரு ஆன்மிகப் பொக்கிஷம். ஐந்தாம் வேதம் எனப்படும் இதில் இல்லாத விஷயங்களே இல்லை என்றே சொல்லி விடலாம். கர்ம வினைப் பயன் எப்படி விளைகிறது என்பது பெரும்பாலோர் உள்ளத்தில் எழும் கேள்வி. இதற்கு தர்க்க பூர்வமான விளக்கம் பாரதத்தில் பீஷ்மர் வாயிலாகக் கூறப்படுகிறது. இந்த உயரிய விஷயத்தை திரு. ராமமூர்த்தி 67 வினா-விடைகளாக, உமா-மஹேஸ்வர சம்வாதமாக அழகுற அமைத்துள்ளார். பகவான் தேவராஜ முதலியாரின் முன் வினைப்பயன் பற்றிய கேள்விக்கு இவ் வாழ்வில் நமக்கு ஏற்படும் எல்லா விளைவுகளும் வினைப்பயனாலேயே விளைகின்றன என்று அறுதியிட்டுக் கூறுகிறார். அதேசமயம், நாம் ஆத்ம சாட்சாத்காரத்திற்காக செய்யும் முயற்சிகளும் முக்தி அடைதலும் முன்வினைப் பயனால் ஏற்படுவதில்லை. அது நம் சிரத்தையாலும், சாதனையாலும், குரு அனுக்ரஹத்தாலும் ஏற்படுகின்றது என்பதையும் கூறுகிறார். பாரதத்தின் அனுஷ்டான பருவத்திலிருந்து இந்த நூலை ஆசிரியர் அழகுறத் தொகுத்துள்ளார். வைதிக சிந்தனையில் எழும் பல ஐயங்கட்கு இந்த நூல் விடை அளிக்கிறது. பதிப்பு: M.S. ராமமூர்த்தி, 14, V.C கார்டன், 3வது தெரு, மந்தைவெளி, சென்னை-600 028. விலை ரூபாய். 100/-*


ரமணோதயம் சந்தா விவரம்

**ஆண்டு சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20

**ஆயுள் சந்தா:** ₹ 1500 **5 ஆண்டு:** ₹ 350



# செய்திகள்

மார்கழி மாத புனர்வசு நன்னாள் – *134 ஜயந்தி விழா*

விதானம் கட்டித் தொங்கல் விட்டு விநோதஞ்சேர்
பதாகை தூங்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறாமோஎன்று
அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.

- முருகனாரின் புனர்வசு வண்ணம்

*ரமண கவி முருகனார் பகவானின் ஜயந்தி விழா (பிறந்தநாள்) எவ்வாறெல்லாம் எதிர்காலத்தில் ரமண அன்பர்களால் கொண்டாடப்பெறும் என்று கவிதை வாயிலாகக் கண்ட அவரது கனவு இன்றைய நாளில் நனவாகி வருகின்றது. இக்காலத்தில் எக்காலத்தும் இல்லாத அளவு ரமண அன்பர்கள் கூட்டம் பல்கிப் பெருகி வருகின்றது என்பது நிதர்சனம். பகவானின் 134 ஜயந்தி விழா (மார்கழி புனர்வசு) எங்கெல்லாம் கொண்டாடப்பட்டனவோ அங்கெல்லாம் பெருந்திரளாகக் கூடிய பக்தர்கள் கூட்டம் இவ்வுண்மையை வெளிப்படுத்துகிறது. இவ்விழாவில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் இந்நன்னாளில் ஏதாவது ஒரு குற்றேவல் செய்யக் கிடைக்காதோ என்று ஏங்கித் தவித்தது அன்பர்கள் ரமணரின்பால் கொண்ட பக்தியைக் காட்டுகிறது.*

ஸ்ரீரமணாஸ்ரமம், திருவண்ணாமலை

*இவ்வாண்டு இவ்விழா ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 19-12-2013 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சிறப்பு அபிஷேகம், பாராயணம் மற்றும் விசேஷ அலங்காரங்களுடன் திரளான பக்தர்கள் பங்கேற்க பகவானின் 134வது ஜயந்தி விழா விமரிசையாக நடைபெற்றது. சாதுக்கள், கலந்து கொண்ட பக்தர்கள் மற்றும் திரளான பொதுமக்கள் அனைவருக்கும் விரிவான முறையில் அன்னம் பாலிக்கப்பட்டது என்பது சிறப்பம்சமாகும். சிறப்பு இசைநிகழ்ச்சிகள் 17, 18 மற்றும் 19-ஆம் தேதிகளில் நடைபெற்றன. இவ்விழா நிகழ்ச்சிகள் பின் அட்டையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

ரமணகேந்திரம், சென்னை

*19-12-2013 அன்று சென்னை ரமண கேந்திரத்தில் பகவானின் ஜயந்தி விழா காலை 7 மணி முதல் மஹன்யாஸ ஏகாதச ருத்ராபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் மதியம் அன்னதானத்துடன் நடைபெற்றது. மாலை திருமதி. சியாமளா ராமச்சந்திரன் அவர்களின் ஹரிகதை மற்றும் மயிலை மாட வீதிகளில் பகவானின் திருவுருவப் படம் வீதிவுலா என மிக விமரிசையாக நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 21, 22-12-2013 ஆகிய இருநாட்களிலும் மாலை தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இவற்றில் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக டாக்டர் வி. நிரஞ்சன், டாக்டர் எஸ். ராம் மோஹன் திரு. பி. ஆர். குமார். திரு. பி. தியாகராஜன், பிர. கிரிதர ஜெகதீஷ், திருமதி. சிந்துஜா ஆகியோர் பங்கேற்றனர். சுவாமி தியாகேசாநந்தா ஞாயிறன்று தலைமையுரை ஆற்றினார்.*

ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

*19-12-2013 வியாழனன்று காலை 7.30 மணி முதல் நாதஸ்வர மங்கல இசையுடன் துவங்கிய விழாவில் தொடர்ச்சியாக வேதபாராயணம், ரமண அஷ்டோத்ர பூஜை நடைபெற்றன. பின்னர் திருவாசக செந்நாவலர் சத்குருநாத*

*ஓதுவார் (மயிலை கபாலீஸ்வரர் கோயில் ஓதுவார்) ரமண சந்நிதி முறை பண் இசையில் பாடி மகிழ்வித்தார். தொடர்ந்து திரளாகக் கலந்து கொண்ட 400க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு சிறப்பு அன்னம் பாலிக்கப்பட்டது.*

*முன்னதாக 18-12-2013 புதன்கிழமையன்று பகவான் ரமணரின் ரமண வழிப் பயிலும் வண்ணம் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை 'ஆத்ம விசாரம்' சிறப்பான முறையில் பாவிக்கப்பட்டது. 35 அன்பர்கள் இதில் நாள்முழுதும் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும். இந்நிகழ்வு இனிவரும் நாட்களில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும்.*

ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*19-12-2013 அன்று காலை 10 மணி முதல் மதியம் வரை பகவானின் ஜயந்தி விழா ஸ்ரீமத் சிவஸ்ரீ பரானந்த மஹராஜ் அவர்கள் முன்னிலையில் திருமதி. திரிவேணி இராதாகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்ற சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கூடியிருந்த 200க்கும் மேற்பட்ட அன்பர்கள் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தபின் அனைவருக்கும் அன்னப் பிரசாதம் அளிக்கப்பட்டது.*

*-திரு. சிரஞ்சீவி, இராமநாதபுரம்*

ஸ்ரீரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

*29-12-2013 ஞாயிறன்று நங்கைநல்லூர் ஸ்ரீவரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய ரமண ஜயந்தி விழா இசைக்கவி ரமணன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவுடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆஸ்திக அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.*

ஸ்ரீரமண மந்திரம் மந்திரம், பழனி

*30-12-2013 திங்கட்கிழமையன்று ஸ்ரீ சாய்சதன், சண்முகபுரம் பழனியில் மாலை 6 மணி முதல் பகவானின்*

*134வது ஜயந்தி விழா கொண்டாடப்பட்டது. திரு. என். சோமசுந்தரம் அவர்கள், தலைவர் ரமண மந்திரம், பழனி அவர்கள் தலைமையில் டாக்டர் டி.என். பிரணதார்த்திஹரன், ஆசிரியர் ரமண ஒளி, மதுரை அவர்கள் சிறப்புரையாற்றினார். திரளாக பக்தர்கள் கலந்து கொண்டு பயனுற்றனர்.*

## ஸ்ரீ ரமண சத்சங்கம், வேலூர்

*30-12-2013 திங்கட்கிழமையன்று வேலூர் டவுன் ஹாலில் மாலை 3 மணி முதல் பகவானின் ஜயந்தி விழா பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பகவானின் 'அருணை மாமுனிவர்' எனும் வீடியோ தொகுப்பு காண்பிக்கப்பட்டது. பகவான் அருளிய பாடல்களை நங்கைநல்லூர் திரு. சுப்ரமணியம் அவர்கள் இசைபடப் பாட அனைவரும் உடன் பாடினர். திரு. தியாகராஜன், இணை ஆசிரியர், ரமணோதயம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவ்விழாவின் அமைப்பாளர் திரு. சி.எஸ். நாகராஜன். அன்னாரின் இல்லத்தில் ஒவ்வொரு மாத புனர்வசு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. (தொடர்பு எண்: 9345244925).*

## குடியாத்தம்

*1-1-2014 புதன்கிழமையன்று ரமண ஜயந்தி விழா ஓம் நமசிவாய கோடி நாம சங்கீர்த்தன பக்த சபாவின் அடியார்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு பூஜைகள், அக்ஷரமணமாலை பாராயணம் என நாள் முழுதும் கொண்டாடப்பட்ட இவ்விழாவில் திரு. கே. முரளி, உதவி வானிலை ஆய்வாளர், சென்னை விமான நிலையம், தலைமையுரையாற்ற திரு. ஆ. குமார் ராஜா, பதிப்பாளர், ரமணோதயம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னப் பிரசாதம் சிறப்பான முறையில் வழங்கப்பட்டது. பகவானின் திருவுருவம் மஹாலிங்க ரூப வடிவத்திற்கு இடையில் அமைக்கப்பட்டு சிறப்புப் பூஜைகள் பள்ளிச் சிறுவர்களால் ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் கொண்டாடப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.*

*(திரு. பாபு, அமைப்பாளர், தொடர்பு எண். 7667170189). ஸ்ரீ ரமணர் இறைபணி மன்றம் எனும் அமைப்பு 23/10 A திலகர் தெரு, புதுப்பேட்டை, குடியாத்தம் எனும் இடத்தில் இயங்கி வருகின்றது. ஒவ்வொரு பௌர்ணமியன்றும் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் சிறப்பு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றது. தொடர்பு எண். 9360001527.*

ரமணர் திருக்கோயில், சேலம்

*1-1-2014 புதன்கிழமையன்று ரமணர் திருக்கோயில், சேலம் சார்பாக ரமண ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

*அக்ஷரமணமாலை பாராயணத்துடன் கே. சுந்தரராஜன், ஸ்ரீரங்கம், திருச்சி மற்றும் திரு. டி.வி. சந்திரமௌலி, ரமணாச்ரமம், திருவண்ணாமலை ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றினர். கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

*(இவ்விழா மேலும் பல்வேறு இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருப்பினும் அதற்கான விவரங்கள் கிடைக்கப் பெறாமையால் பிரசுரிக்கப் படவில்லை.)*

வெள்ளிவிழா மற்றும் ரமண தியான மண்டபம் திறப்பு விழா
ரமண வித்யாபீடம், திருச்சுழி

*திரு. சகஜானந்தா அவர்களால் நிறுவப்பட்ட ரமண வித்யா பீடத்தின் வெள்ளிவிழா 29-12-2013 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. அன்றே நித்ய நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் எழுந்தருளி நிற்கும் பகவானின் 'ரமண தியான மண்டபம்' திறப்பு விழா வைபவம் திருமதி. சுசீலா ரமணன் அவர்கள் குத்து விளக்கேற்ற, ரமணாச்ரமத் தலைவர் திரு. வே.சு. ரமணன் அவர்கள் திறந்து வைத்தார். ஜெய விலாஸ் குழுமத்தைச் சார்ந்த திரு. டி.ஆர். தினகரன், திரு. டி.ஆர். வரதராஜன், மற்றும் டி.ஆர். கண்ணன் ஆகியோருடன் டாக்டர் நம்பெருமாள் சுவாமி, (அரவிந்தர் கண் மருத்துவமனை, மதுரை), ஆயக்குடி அமர் சேவா சங்கம் திரு. எஸ். ராமகிருஷ்ணன், திரு. சேதுராமன் மற்றும் நர்மதா அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து*

*கொண்டு சிறப்பித்த அன்பர்கள். இவ்விழாவின் சிறப்பம்சமாக 1000 சிறுவர்களும் மற்றும் 1000 பெரியோர்கள் என 2000 பேர் பங்கேற்ற அக்ஷரமணமாலை சிறப்புப் பாராயணம் அமைந்தது குறிப்பிடத்தக்கது.*

நூல் வெளியீட்டு விழா,
ரமணாலயம், இராஜபாளையம்

*30-12-2013 திங்கட்கிழமையன்று மாலை 6.30 மணி அளவில் பி.எஸ். குமாரசாமி ராஜா கல்யாண மண்டபத்தில் திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்கள் பகவானின் 'உள்ளது நாற்பது' எனும் உபதேச நூலுக்கு விரிவுரையாக எழுதிய 'ஸ்வாத்மஸூகி' எனும் நூல் ரமணாச்ரமத் தலைவர், திரு. வே.சு.ரமணன் அவர்களால் வெளியிடப்பட்டது. இதற்கான முதல் பிரதியை திரு. பி.ஆர். ராமசுப்ரமணிய ராஜா, தலைவர், ராம்கோ, குழுமம் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நூல் இராஜபாளையம், ரமணாலயத்தினரால், ரமணாச்ரமம் திருவண்ணாமலை பதிப்பாக வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவைத் தொகுத்து முன்னிறுத்தியவர் திரு. லோகநாதராஜா, தலைவர், ரமணாலயம், இராஜபாளையம் ஆவார். இவ்விழாவில் திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.*

*இவ்விழாவினைத் தொடர்ந்து 31-12-2013 முதல் 4-1-2014 வரை அனைத்து நாட்களிலும் காலையிலும் மாலையிலும் 'உள்ளது நாற்பது' மற்றும் பகவான் சரிதம் திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டது. இவ்வனைத்து நாட்களிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும்.*

அக்ஷரமணமாலை அகண்டபாராயணம்

*பகவான் ரமண மகரிஷிகள் அருணாசல அக்ஷரமணமாலையை 1914ஆம் ஆண்டில் அருளினார். அதன் நூற்றாண்டையொட்டி கடந்த டிசம்பர் 30ஆம் தேதி (பகவானின் ஆங்கில பிறந்த தேதி) திங்கட்கிழமை காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தொடர்ச்சியாக அக்ஷரமணமாலை அகண்டபாராயணம்*

ஆச்ரமத்தில் உள்ள புதிய ஹாலில் சிறப்பாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பாராயணம் செய்தனர்.

*** *** ***

## புனர்வசு திருநாட்கள் - 2014

| | | |
|---|---|---|
| ஜனவரி | 16 | வியாழன் |
| பிப்ரவரி | 12 | புதன் |
| மார்ச் | 11 | செவ்வாய் |
| ஏப்ரல் | 08 | செவ்வாய் |
| மே | 05 | திங்கள் |
| ஜூன் | 01 | ஞாயிறு |
| | 28 | சனி |
| ஜூலை | 26 | சனி |
| ஆகஸ்ட் | 22 | வெள்ளி |
| செப்டம்பர் | 18 | வியாழன் |
| அக்டோபர் | 16 | வியாழன் |
| நவம்பர் | 12 | புதன் |
| டிசம்பர் | 09 | செவ்வாய் |

## ரமணோதயம் காப்பு நிதி
## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு | N.R சதாசிவம், மதுரை | 5000 |
| திரு | சேதுராமன், சென்னை-88 | 500 |
| திரு | K. இராமதாஸ், சென்னை-29 | 1000 |
| திரு | V. ஜெய்சங்கர், கோவை | 5000 |
| திரு | C. பட்டாபிராமன், சென்னை-23 | 1000 |
| திரு | Dr.P. நடராஜன், கோவை | 2000 |
| திரு | N. சங்கரன், சென்னை-20 | 500 |
| திரு | R. கண்ணன், கோவை | 1000 |
| திரு | N. ரஞ்சன், சென்னை | 1000 |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |
| ***ஒசூர்*** அசோக்குமார் | .......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.






ரமணாலயம், இராஜபாளையம் சார்பாக 30-12-2013 அன்று திரு. P.S. குமாரசாமி ராஜா கல்யாண மண்டபத்தில் திரு நொச்சூர் வெங்கடராமன் அவர்கள் எழுதிய 'ஸ்வாத்மஸூகி' (உள்ளது நாற்பது உரை) நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ஸ்ரீரமணாச்ரம தலைவர் திரு. V.S. ரமணன் அவர்கள் நூலை வெளியிட்டார். திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்களின் தொடர் சொற்பொழிவும் நடைபெற்றது. விரிவான செய்தி உள்ளே.



29-12-2013 அன்று திருச்சுழியில் ஸ்ரீ ரமண வித்யா பீடத்தில் புதிதாக அமைந்துள்ள ரமண தியான மண்டபத்தை ஸ்ரீரமணாச்ரம தலைவர் திரு. V.S.ரமணன் அவர்கள் திறந்து வைத்தார். விரிவான செய்தி உள்ளே.

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542





















